# எழுநிலம்

மாத இதழ் | மணம்- ௧ | டிசெம்பர் 2021 | திருவள்ளுவர் ஆண்டு 2052




சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்

விழித்துக்கொள் தமிழினமே

பறிபோகுமா ஆரியகுளம் ?

சுதந்திரத்தைத் தேடி

# நீங்கா நினைவுகளுடன்...



நீங்கா நினைவுகளுடன் - எங்கள்
பாலா அண்ணனுக்கு ஒரு பதிவு.
தெள்ளிய சிந்தனாவாதி.
தலை சிறந்த முற்போக்காளர்.
பல்கலைக்கழக காலத்திலேயே
நாடு மதம் இனம் கடந்து
அநீதிக்கு எதிராய்
குரல் கொடுத்தவர்!
தன் தாய் தமிழுக்கு
துயரம் நேர்கையில்
தாளாதிருப்பரா?

அண்ணனின் கையை வலுப்படுத்தும்
அரசியல் ஆலோசகராக
அடேல் அன்ரியுடன்
அணியில் சேர்ந்தார்.
ஈழப் போராட்டம் உலக அரங்கில்
பேசப்படவும்
சிங்கள தேசத்து சிறுமைகளை
வெளிச்சம் போட்டு உலகுக்கு
காட்டவும்
கடுமையாக உழைத்தவர்
எங்கள் பாலா அண்ணன்!!
பாடாய்ப் படுத்திய
கொடிய நோயிலும்
மூப்பிலும் தளராது
தாயக விடிவிற்காய்
குரல் கொடுத்தவர்!!

கொழும்பில். பெங்களூருவில்
திம்புவில்..
எங்கு பேசினும்
அண்ணனின் சிந்தனையை
தெளிவுறச் சொன்னவர்!
இருபத்தேழு வருடங்கள்
தாயக வேள்வியில்
தன்னைக் கரைத்தவர்
நோயினில் போனது
தமிழர்க்கோர் பேரிழப்பு.

பாலா அண்ணா!
சிலசில சமயங்கள்
தலைவரும் நீங்களும்
தர்க்கத்தில்.
அதுவும்
தமிழின விடிவிற்கு
எது சரி என்ற விவாதம்!
'வீரமார்த்தாண்டன்' என்று
அன்பாய் விழித்து அவர்
விசனத்தைத் தணிப்பீர்கள்!
இணைபிரியாது தலைவருக்கரணாய்
ஆசானாய் இருந்தீர்கள்!
எமைப் பிரிந்து
ஆண்டுகள் பதினைந்து ஆயினும்
ஆறவில்லை எமது ரணம்.

இன்று நீங்கள் இங்கிருந்தால்
சில்லறைகள் எல்லாம்
சில்மிசம் செய்யுமா?
ஆளுக்காள் அரசியல் செய்யும்
ஆசை கொள்ளுமா?
தேசத்தின் குரலே!!
ஆண்டுகள் போனாலும் உன்
அரசியல் வியூகம்
அகிலத்தில் வாழும்!
வணங்குகின்றோம்! தலை
வணங்குகின்றோம்!!

- கோற்றவை

# உள்ளடக்கம்....

பக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து | 03 |
| விழித்துக்கொள் தமிழினமே | 04 |
| மறிபோகுமா ஆரியகுளம்? | 08 |
| சுதந்திரத்தைத்தேடி... வீரவேங்கை நிதி | 10 |
| புலம்பெயர் சமூகத்திற்கு.... | 12 |
| வரலாற்றில் ஒரு நாள் | 14 |
| போர்க்கால இதழ்கள் | 16 |
| விடுதலைப்புலிகளின் 110 முதன்மை உறுப்பினர்கள் எங்கே? | 24 |
| ஈழத்துக் கவிஞைகளின் நவீன கவிதைகளில் போரும் போரியல் வாழ்வும் | 28 |
| வீடு - சிறுகதை | 32 |



Ezhunilam


எழுநிலம்

டிசெம்பர் 2021

தொடர்புகளுக்கு:

ezhunilam@yahoo.com


## திருக்குறள்



குறள் 664:

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

விளக்க உரை:

இச் செயலை இவ்வாறு செய்து முடிக்-கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம், சொல்லிய படி செய்து முடித்தல்தான் கடினமான பணி.

# தலைவரின் சிந்தனையிலிருந்து....

**நீதியையும் தர்மத்தையும் சுதந்திரத்தையும்**
**இலட்சியமாகக் கருதிய எமது விடுதலைப் போராட்டம்**
**நிச்சயம் வெற்றியடைந்தே தீரும்.**

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன்*



## ஆசிரியர் பக்கம்

# தமிழ் மக்கள் தீர்மானிக்கும் நேரம் வந்துவிட்டது

தாயகத்தில், தமிழ்க் கட்சிகளின் தன்னிச்சையான செயற்பாடுகள் தமிழர்களை மீளமுடியாத புதைகுழியினுள் தள்ளி விடுவதற்கான முயற்சி என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ளது. 13ம் திருத்தச் சட்டத்தைத்தான் இந்தியா விரும்புகிறது, இந்தியாவை மீறி நாம் எதுவும் செய்ய முடியாது, இந்தியாவின் விருப்பம் தான் எமது நிலைப்பாடும் என்றும், என்றாவது இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் பட்சத்தில் நாமும் எமது கோரிக்கையை மாற்றிக் கொள்வோம் என்றும் இதுவரை காலமும் தீர்மானமாக இருந்த சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் இப்போது மாறியிருப்பதாகத் தெரிகிறது. சுமந்திரனின் மற்றைய கூட்டுக் கட்சிகளுடன் கலக்காத அமெரிக்கப் பயணமும், அங்கு நடந்த பேச்சுவார்த்தையும் அதைக் கோடி காட்டினாலும் இன்னுமொரு சம்பவம் அதனை உறுதிப்படுத்தியிருக்கிறது. இந்தியா வந்திருந்த பசில் ராஜபக்சவைச் சந்திக்க நேரமில்லாத இந்தியப் பிரதமர் மோடி, சம்பந்தர் தரப்புக்கு நேரம் ஒதுக்கி, தன்னைச் சந்தித்துப் பேச வருமாறு அழைத்திருக்கிறார். அந்தச் சந்திப்பு சம்பந்தர் தரப்பின் ஒரு சில சாக்குப் போக்குகளுடன் தட்டிக் கழிக்கப் பட்டிருக்கிறது.

அதே சமயம், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி, '13ம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா விரும்புவதாக பல தடவைகள் தெரிவித்துவிட்டது, இந்தியாவை அழைப்போம்' என்று தீர்மானம் இயற்றி விட்டார்கள். கூட்டத்தில் ஒன்றாக நின்ற மாவையார் பின்னர் சிறிது விலகி நின்று, சித்தார்த்தன் தலைமை தாங்கட்டுமே என்கிறார். கூட்டத்தில் கலந்து கொள்ளாத, இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே கொண்ட கஜேந்திரகுமார் அணியினர் சமஷ்டி ஒன்றுதான் வழி, 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற தீர்மானத்தின் கீழ் வரும் 13ஐ ஏற்றுக் கொள்ள முடியாது என்று உறுதியாக நிற்கின்றனர். சம்பந்தர் அணி சம்பவ இடத்திலேயே இல்லை. இவர்கள் எல்லோரையும் ஓரணியாகத் திரட்டி தீர்மானத்தைக் கொண்டுவர பாடாய்ப்படுகிறார் வேலன் சுவாமிகள்.

புலம்பெயர் தேசங்களில் நிலைமை வேறு. ஆளாளுக்கு தனிக் குழுக்கள் அமைத்துக் கொண்டு, ராஜதந்திரிகள் தம்மைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்காகக் காத்துக் கிடக்கிறார்கள் எம்மவர்கள். எல்லோருமே மறந்துபோன முக்கியமான விடயம் ஒன்று உண்டு. அதுதான் தமிழ் மக்களின் இறைமையும் இருப்பும்.

இந்தப் பன்னிரண்டு வருட காலத்தில் நாங்கள் பலம் மிக்கவர்களாக எங்களை மாற்றிக் கொள்ளவில்லை, எங்களுக்கென்று ஒரு வெளிவிவகாரக் கொள்கையில்லை, நாங்கள் ஒன்றுபட்டு நிற்கவுமில்லை. புலம்பெயர் தேசத்திலிருந்து சென்ற பணம் குறிக்கப்பட்டளவு தனி நபர்களின் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வாக அமைந்திருக்கிறதே தவிர 2009 இன் பின் தாயகத்தில் எந்தவொரு பொருளாதார, அரசியல் கட்டமைப்பையும் நாங்கள் உருவாக்கவில்லை. யுத்த காலத்தில் அத்தனை கட்டமைப்புகளையும் உருவாக்கி திறம்பட நிர்வகித்த நாங்கள், இன்று ஒருவேளை அந்நிய நாடுகள் தலையிட்டு ஒரு தீர்வைப் பெற்றுத் தந்தாலும், அதை எங்களால் திறம்பட நிர்வகிக்க முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கக் கூடிய வகையில் எதையும் செய்யவில்லை. பூகோள அரசியலில், தத்தமது நாடுகளின் நலன் கருதி பிறநாடுகள் ஊறுகாயாக தொட்டுக் கொள்ளும் நிலையில்தான் தமிழர்கள் இன்னமும் இருக்கிறார்கள்.

ஆரம்ப முதலே சிறிலங்கா அரசு தெளிவான திட்டமிடலுடன் செயற்படுகின்றது. அண்மைக் காலமாக, அது எவரையும் பகைக்காத, அதே சமயம் எந்த நெருக்கடியிலும் தமிழர்களுக்கு எந்த உரிமைகளையும் விட்டுக் கொடுக்காத தனது கொள்கையை இறுக்கமாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

ஏதோ செய்யப் போவதான எதிர்பார்ப்பைத் தந்ததைத் தவிர இந்தியா தமிழர்களுக்கு எதுவுமே செய்தது கிடையாது. மாறாக, சிங்கள அரசுக்கு முண்டு கொடுத்து உலக அரங்கில் அதனைக் காப்பாற்றும் வேலையை மட்டுமே செய்திருக்கிறது. காணாமல், காலாவதியாகிப் போன தமிழ் அரசியற் கட்சிகளையோ இந்தியா தரப்போகும் தீர்வையோ நம்பி இன்னமும் வருடங்களையும் வாழ்க்கையையும் தொலைக்கப் போகின்றோமா அல்லது எம்மைப் பலமுள்ளவர்களாக்கி, ராஜதந்திரத்துடன் விடிவை நோக்கி நகரப் போகின்றோமா என்பதை தமிழ் மக்கள் தீர்மானிக்கும் நேரம் வந்துவிட்டது.

# விழித்துக்கொள் தமிழினமே!

- பாரி -

இலங்கை அரசு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்து திக்கித் திணறுகிறது. அரச ஊழியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை சீராகக் கொடுப்பதற்குக் கூட வங்கியில் பணமில்லை. அந்நியச் செலாவணிக்கான நிதி மிகமிக மோசமடைந்துள்ளது. இவை யாவற்றுக்கும் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் சீனாவின் கடன் பிடியில் இலங்கை சிக்கியிருப்பதுதான் அவற்றில் மிக முக்கியமானது. அண்மைக் காலங்களில், இலங்கைக்கும் சீனாவுக்குமான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது போன்றதொரு தோற்றப்பாடு தென்பட்டாலும் அது ஒரு மாயைதான்.

அண்மையில் சீனத் தூதுவர் தனது குழுவினருடன் யாழ் வந்திருந்தார். பருத்தித்துறை முனை சென்று புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார். இந்தியக் கரை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று அக்கறையாக விசாரித்திருக்கிறார். மக்களின் மனதைத் தொடும் வகையில் நல்லூர்க் கோவிலில் அர்ச்சனை செய்து வணங்கியிருக்கிறார். மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கியிருக்கிறார். அரியாலை கடலட்டைப் பண்ணையைப் பார்வையிட்டிருக்கிறார். மிகமுக்கியமாக, மன்னார் சென்று அங்கிருந்து விசைப்படகேறி இராமர் அணை என்று சொல்லப்படும் மணல் திட்டுகளில்





மூன்றாவது திட்டுவரை சென்று இந்தியாவுக்கான தூரத்தை விசாரித்து, வரலாற்றைப் பற்றிக் கதைத்து, கடலைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறார். இவை-யெல்லாம் பத்திரிகைகளிலும் காணொளிகளிலும் வந்த அண்மைய பேசு பொருள்.

ஒரே நாட்டுக்குள் தமிழர்களுக்குத் தீர்வை எட்டுவது என்பதை ஏகமனதாக ஏற்றுக் கொண்ட-தாகத் தெரியும் தமிழ்க் கட்சிகளிடையே 'தீர்வை எட்டுவது' என்ற போர்வையில் நடைபெறும் அதிகாரப் போட்டி இப்போது பரகசியம். சிங்கள அரசுக்கு யார் கூடுதலான விசுவாசத்தைக் காட்டுவது என்ற போட்டியாகவும் இது பார்க்கப்படுகிறது. இந்த வேளையில் நடைபெற்ற சீனப் பிரதிநிதிகளின் யாழ் வருகை அவர்கள் தமிழர்களுக்கான மீட்பராக இருக்கக் கூடுமோ என்ற எதிர்பார்ப்பினை சிலர் மனதில் எழுப்பியிருப்பதும் தெளிவாகத் தெரிகிறது. தீர்வைத் தருகிறார்களோ இல்லையோ ஒரு தீர்மானத்துடன் தான் சீனா தமிழர்களின் மீது அன்பை அள்ளிச் சொரிகிறது.



2009 இல், பாரிய இனப் படுகொலை நடைபெற்ற நேரத்தில், எங்களுக்கு காவலரணாக நின்று இரத்தம் சிந்தியவர்களும் எங்களின் குஞ்சு குழ-ந்தைகளும் எங்களின் இன சனம் அத்தனையும் கருகிக் கிடந்த சூழ்ச்சியின் பின்னால் சீனாவின் கரம்தான் முன்னாலும் மும்முரமாகவும் நின்றதை எங்களால் மறக்க முடியுமா? இது பல நாடுகளின் கூட்டுச் சதியாக இருந்தாலும், அதன் பெரும்பான்மைக்கு சொந்தக்காரர் சீனாதான். போருக்குப் பின்னான நாட்களில், இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடமாட்டேன் என்னும் சீனா, தமிழர்களின் மனங்களில் இடம் பிடித்து 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்கிற சிங்களத்தின் வேலையை இலகுவாக்க முனைகிறதா? அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் அகலக்கால் வைப்பதும் ஆயிற்று சிங்களத்திற்கான ஆதரவை வலியுறுத்தி இந்தியாவிற்கு ஆப்பு வைப்பதும் ஆயிற்று என்ற ஒரு கல்லில் இரு மாங்காய்கள் என்ற திட்டமா?











இலங்கை விவகாரத்தில் தலையிட இந்தியாவிற்கு இருக்கும் ஒரே பிடி தமிழர் பிரச்சனைதான். இலங்கையுடன் செய்து கொண்ட 13ம் திருத்தச் சட்ட ஒப்பந்தம் ஒன்றையே நம்பியிருக்கும் இந்தியாவை இரகசியமாகத் தீட்டப்படும் புதிய அரசியல் யாப்பின் மூலம் கழற்றி விடும் திட்டத்தில் இருக்கிறது இலங்கை. 13இனை அமுல்படுத்துவோம், எங்களை வந்து சந்தியுங்கள் என்று தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பின் மேல் அழைப்பு அனுப்பிக் கொண்டிருக்கிறது இந்தியா. சீன ஆதிக்கம் இந்தியாவை வலுவாகச் சூழ்ந்து கொண்டிருக்கும் இந்த நிலையில் இந்தியா காலம் தாமதிக்க இயலாது. விரைந்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இலங்கையின் கடன் நெருக்கடிக்கான தற்காலிக தீர்வாக 1.1 பில்லியன் டாலர் பணத்தை இந்தியா வாரி வழங்கியிருந்ததும் இதன் ஒரு வெளிப்பாடுதான். மேற்குலகத்திடம் இலங்கை கடன் பெறும்போது இனப் பிரச்சனைக்கான தீர்வு மற்றும் பொறுப்புக் கூறலுக்கு முகம் கொடுக்க வேண்டும், இதனால்தான் நிபந்தனை விதிக்காத சீனாவிடம் சரணாகதியாகியது இலங்கை. அமெரிக்கா இந்தியக் கூட்டு, இந்தியாவை மீறி அமெரிக்கா தமிழர்களுக்கு உதவ விடாது. இதனால், இப்போதுள்ள





சூழலில் தமிழ் மக்களிற்கான தீர்வை முன்னிறுத்துவது ஒன்றுதான் இந்தியாவை இலங்கையுடன் இணைக்கும் பாலமாக இருக்கும்.

எங்களுக்குள் ஆயிரம் பிளவுகள். இருக்கும் 13 இல் இருந்து ஆரம்பிப்போம், இந்தியாவிடம் செல்வோம் என்று ஒரு சாரார். 13 இற்கு மேலான உள்ளகப் பொறிமுறை ஒன்று வேண்டும், இல்லையெனில் வேறு சில நாடுகளில் இருப்பதுபோல வெளியகப் பொறிமுறை ஒன்றை மேற்குலக உதவியுடன் உருவாக்க வேண்டும் என்று இன்னொரு சாராரும், எல்லாவற்றையும் தூக்கியெறிந்து விட்டு சமஷ்டி ஒன்றுக்காக மட்டுமே குரல் கொடுக்க வேண்டும் என்று இன்னொரு பகுதியினரும் பிரிந்து நின்று ஆளையாள் விமர்சிக்கிறார்கள். ஒற்றையாட்சி என்ற சிங்களத்தின் தீர்க்கமான காய் நகர்த்தலுக்கு இவர்களின் பதில் என்ன என்பதை யாரும் வெளிப்படையாகத் தெரிவிப்பதைத் தவிர்த்து விடுகிறார்கள். முன்பு வாக்குறுதி அளித்தபடி, வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பைச் செய்து, தமிழ் மக்களிடம் தான் பெற்றிருக்கும் அவநம்பிக்கையையும் வெறுப்புணர்வையும் போக்க இந்தியா இம்முறையாவது தயாராக இருக்கிறதா? எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து, சரியான அரசியல் வழியையும் அதற்கான நேர்மையான தலைமையையும் தேர்ந்தெடுக்க வேண்டிய கடப்பாடு எம் மக்களுக்கே உண்டு.

# தமிழுக்குக் கிடைத்த அங்கீகாரம்!

இங்கிலாந்தில், 2021 டிசெம்பர் 2ம் திகதியன்று, சனவரி மாதத்தினை தமிழர்களின் பாரம்பரிய மாதமாகக் கொண்டாடுவதற்கான பிரேரணை கன்சவேற்றிவ் கட்சி உறுப்பினர் திரு.நிக் ஜோர்ஜ் அவர்களால் அஸெம்பிளியில் முன்வைக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரித்தானிய அஸெம்பிளியின் அனைத்து உறுப்பினர்களும் தமது ஆதரவைத் தெரிவித்திருந்த நிலையில், சனவரி மாதத்தினை தமிழர்களின் பாரம்பரிய மாதமாக (Tamil Heritage Month) மாற்றும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா மற்றும் வேறுபல நாடுகளில் இருந்து இங்கு வந்த தமிழ்ச் சமூகம் இங்கிலாந்தில் தமது வலுவான பங்களிப்பைச் செய்வதாகவும், இங்கிலாந்தின் பொருளாதார, கலாசார மற்றும் அரசியலில் தமிழர்களின் பங்களிப்பு தவிர்க்கவியலாததாக இருப்பதாகவும் அங்கு குறிப்பிட்டுள்ளனர். மேலும், பெருநோய்த் தொற்றுக் காலத்தில் மருத்துவர்களாக, செவிலியர்களக, முன்னணி சுகாதார வல்லுனர்களாக மற்றும் ஆசிரியர்கள், சமூக பாதுகாப்பாளர்களாக பல்வேறு வழிகளில் தமிழர்களின் சமூகப் பங்களிப்பு உன்னதமாக உணரப்பட்டுள்ளதாகவும் அங்கு அவர்கள் தெரிவித்துள்ளனர்.











# பறிபோகுமா ஆரியகுளம்?

யாழ் மாநகர முதல்வர் திரு விஸ்வலிங்கம் மணிவண்ணனின் 'தூய கரங்கள், தூய நகரம்' திட்டத்தின் ஒரு பகுதியாக யாழ் நகரில் அமைந்துள்ள வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க 'ஆரியகுளம்' புனரமைக்கப்பட்டுள்ளது. துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு, புதுப்பொலிவுடன் இன்பச் சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக திருத்தி அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதே.

திறப்புவிழாவுக்கு வந்திருந்த, அருகிலிருக்கும் 'நாக விகாராதிபதி' தனக்கு முன்னால் தெருவை நிறைத்த 'கண்டிய நடனம்', தன்னைச்சூழ தனது பரிவாரங்கள் என்று வந்ததுதான் நெருடலான விடயம். பேட்டி ஒன்றின்போது, திரு மணிவண்ணன் அவர்கள் தனக்கும் கண்டிய நடனம் தெருவில் வந்ததற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்கிறார். தமது நிகழ்ச்சி நிரலில் அப்படி எந்த நடனமும் இடம்பெறவில்லை, தேரர் தன்னுடன் அவர்களைக் கொண்டுவந்தால் நான் எப்படிப் பொறுப்பாக முடியும், அதுவும் அது தெருவோடு நின்றுவிட்டது என்கிறார். அது சரி, அதை யார் ஒழுங்கு செய்தார்கள் என்பது இன்றளவும் எனக்குத் தெரியாது என்று மாநகர முதல்வர் சாதிக்கிறார் பாருங்கள். இதை அன்றே தீர்க்க தரிசனத்துடன் கூறிய கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதை இங்கே.





**ஆரியச்சக்கரவர்த்திகளும் ஆரியகுளமும்**

நல்லூரைத் தலை நகராகக் கொண்ட யாழ்ப்பாண இராசதானியின் நகரை அழகுபடுத்தும் முக்கிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக ஆரியகுளம் காணப்படுகின்றது. இப்பெயர் யாழ்ப்பாண இராசதானியில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகளை நினைவுபடுத்தித் தோன்றிய பெயராகும். 13ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்து இலங்கை மீது படையெடுப்புகளை மேற்கொண்ட பாண்டியப் படைத்தளபதிகளே ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பட்டப் பெயரைப் பெற்றிருந்தனர். இவர்களைச் சிங்கள வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான சூளவம்சம் தமிழ்ப் படைத் தளபதிகள் எனக் கூறுகின்றது. இவர்களே 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாண இராசதானியைத் தோற்றுவித்தனர். இதனால் இவ்வரசை தமிழ், சிங்கள, பாளி வரலாற்று இலக்கியங்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு எனக் கூறுகின்றன. 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த இராஜவலிய என்ற சிங்கள இலக்கியமும் அதன் சமகாலத்தில் இலங்கைத்தீவில் இருந்த அரசுகளில் 'ஆரியச்சக்கர'வர்த்திகள் அரசே படைப்பலத்திலும், பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகக் கூறுகின்றது. ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழகத்தில் இராமநாதபுரம் செவ்விருக்கை நாட்டிலிருந்து வந்து நல்லூரை வாழ்விடமாக்கிக் கொண்டவர்கள். இவர்கள் இராமேஸ்வரம் சேது தலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தனர். இதனால் இவர்கள் சேதுகுலம் எனவும் அழைக்கப்பட்டனர். இதை நினைவுபடுத்தும் வகையில் ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்கள் தமது யாழ்ப்பாண அரசின் நாணயங்களிலும், அரச கொடிகளிலும் சேதுவை ஒரு மங்கல மொழியாகப் பயன்படுத்தினார்கள். ஆரியச் சக்கரவர்த்திகள் வாழ்ந்த நாட்டில் அவர்களை நினைபடுத்தும் பல இடங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் என்ற பெயரும் காணப்படுகின்றது. இப்பெயரின் ஒற்றுமையானது யாழ்ப்பாண ஆரியகுளம் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் தோன்றியதென்பதற்குச் சான்றாகும்.

பேராசிரியர். பரமு புஸ்பரட்ணம் (2021)

நாக விகாரையில்
பூசை நடந்ததாம்
ரூபவாகினி சொல்லிற்று..
இனி என்ன?
'காமினி ரீ றூம்'
கதவுகள் திறக்கும்!
சிற்றி பேக்கறியும்
சீனிச் சம்பலும்
நகரப் பகுதியில்
அறிமுகமாகும்!

புத்தன் கோவிலுக்கு
அத்திவாரம் போட
ரத்வத்த வரக்கூடும்!
சிங்கள மகாவித்தியாலயம்
திரும்ப எழுமா?
எழலாம்.

வெசாக் கால வெளிச்சக் கூட்டை
எங்கே கட்டுவார்?
ஏன் இடமாயில்லை?
வீரமாகாளியின்
வெள்ளரசிற் கட்டலாம்,
முனியப்பர் கோவில்
முன்றலிலும் கட்டலாம்.
பெருமாள் கோவில் தேரிலும்
பிள்ளையார் கோவில்
மதிலிலும் கட்டலாம்!

எவர்போய் ஏனென்று கேட்பீர்?
முற்ற வெளியில்
'தினகரன் விழாவும்'
காசிப்பிள்ளை அரங்கில்
களியாட்ட விழாவும்
நடைபெறலாம்!
நாக விகாரையிலிருந்து
நயினா தீவிற்கு
பாதயாத்திரை போகும்!
பிரித் ஓதும் சத்தம்
செம்மணி தாண்டி வந்து
காதில் விழும்!



ஆரிய குளத்து
தாமரைப் பூவிற்கு
அடித்தது யோகம்!
பீக்குளத்து பூக்களும்
பூசைக்குப் போகும்!
நல்லூர் மணி
துருப்பிடித்துப் போக
நாக விகாரை மணியசையும்!

ஒரு மெழுகுவர்த்திக்காக
புனித யாகப்பர் காத்துக் கிடக்க
ஆரிய குளத்தில்
ஆயிரம் விளக்குகள் சுடரும்!
எம்மினத்தின்
இளைய தலைமுறையே,
கண் திறக்காது கிடக்கின்றாய்.
பகைவன்
உன் வேரையும்
விழுதையும் வெட்டி
மொட்டை மரமாக்கி விட்டான்!!



பி.கு: ஆரியகுளத்தை புனிதப் பிரதேசமாக மாற்றுமாறு யாழ்ப்பாணம் நாகவிகாரையின் விகாராதிபதி விமல தேரர் தெரிவித்துள்ளார் என்பது பிந்திய செய்தி.



# சுதந்திரத்தைத் தேடி...



## வீரவேங்கை நிதி
## ( சிவமனோகரி இராசலிங்கம் )

இடைக்காடு ஒரு அழகிய கிராமம். தோட்டங்களும் வயல்வெளிகளும் ஒவ்வொரு வீட்டிலும் தென்னை, மா, பலா, வாழை, எலுமிச்சை, மாதுளை, நெல்லி என்று அத்தனை பசுமைகளும் நிறைந்து பச்சைப் பசேலென்று இருக்கும் இந்த விவசாய பூமியை முடக்கிப் போட்டிருந்தது இராணுவ அடாவடித்தனம். பலாலி, தொண்டைமானாறு, வயாவிளான் என்று மூன்று இராணுவ முகாம்களுக்கிடையில் இருக்கும் இடைக்காடு கிராமம், தொடர் இராணுவ நடவடிக்கைகள், கைதுகள், சுற்றிவளைப்புகள், ஷெல் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள் என்று மன நிம்மதியை இழந்து தவித்துக் கொண்டிருந்தது.

இங்குதான் சிவமனோகரி பிறந்தாள். தந்தை இராசலிங்கம் வயதானவர். அம்மா காலமாகி விட்டார். இரண்டு அக்காக்களும் ஒரு அண்ணனும் திருமணமாகிச் சென்றுவிட, வீட்டையும் இரண்டு அண்ணன்கள், தம்பி, அப்பா என்று எஞ்சிய குடும்பத்தையும் நிர்வகிக்கும் பொறுப்பு மனோகரியின் கையில் வீழ்ந்தது. குடும்பத்தினரும் ஊரவர்களும் உயிருக்குப் பயந்து தினம் தினம் வீட்டை விட்டு ஓடுவதும், நேரங்கெட்ட நேரத்தில் ஊருக்குத் திரும்புவதும், படிப்புத் தடைப்படுவதும் மற்ற இளைஞர் யுவதிகளைப் போல மனோகரியையும் வருத்தியது. இதனைத் தடுத்து நிறுத்தி எம்மவர்களுக்கு நிம்மதி கொடுக்க வேண்டும் என்ற உணர்வுடன் 'சுதந்திரப் பறவைகள்' அமைப்பினருடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தாள் மனோகரி.

முதலுதவி, மருத்துவ தாதிப் பயிற்சி என்று தன்னை தகுதியாக்கிக் கொண்டு, முதலுதவிச் சிகிச்சை நிலையங்களிலும், ஆரம்பப் பாடசாலைகளிலும் பரப்புரைப் பிரிவினருடனும் இணைந்து வேலைகளைத் தொடர்ந்தாள்.

இது அவளின் அண்ணன்களுக்குப் பிடிக்கவில்லை. உறவினர்கள், அயலவர்கள் என்ன பேசுவார்கள் என்பது அவர்களது கவலை. அந்த நேரத்தில் பெண்களுக்கான சமூகச் சூழ்நிலை இவ்வாறுதான் இருந்தது. வீட்டுக் கெடுபிடிகள் மனோகரியை முடக்கி வைக்கவில்லை. வீட்டு வேலைகளை விரைவாக முடித்துவிட்டு சேவையில் இறங்கிவிடுவாள். தவறியதேயில்லை. அப்பாவின் ஆதரவு அவளுக்கிருந்தது.

பயிற்சி முகாமில் இணைந்து இராணுவத்தை எதிர்க்கும் பயிற்சி எடுத்தாக வேண்டும் என்ற எண்ணம் உதித்ததும் தன்னைக் கூட்டிச் செல்லுமாறு நச்சரிக்கத் தொடங்கினாள் மனோகரி. ஒருநாள் 'கேற்' திறக்கப்பட்ட சத்தம். மனோகரியின் அப்பா வந்தார். எல்லோருக்கும் பயம், என்ன சொல்வாரோ என்று.

'வாங்கோ மாமா!'

நேராக விடயத்திற்கு வந்தார் மாமா.

'பிள்ளை! எனக்கு வயசாகிட்டுது. மகள் தெளிவா இருக்கிறா. போராடுறதுதான் முடிவெண்டு இருக்கிறா. விளங்குது.. அது நியாயமும் தான். சரி! முடிவாச் சொல்லுறன். நீங்கள் போகேக்கை அவளை விட்டிடாதேங்கோ. உங்களோட கூட்டிக் கொண்டு போயிடுங்கோ.'

குரல் தளதளத்தது. கண்கள் நிறைந்திருந்தன. தன்னுடைய வலியையும் தாங்கி, நாட்டை நினைக்கும் எப்பேர்ப்பட்ட தந்தை!

சில நாட்களின் பின், 'நிதி' ஆகினாள் மனோகரி. இராணுவ முகாம்களைச் சூழ காவற்கடமையில் இருந்த போராளிகளின் பின்னணியில் நின்று

மருத்துவ சேவை செய்தாள், பெரிய உற்பத்தி நிலையமொன்றின் பகுதிப் பொறுப்பாளராக இருந்து பலரை வழி நடத்தினாள். பயிற்சி முகாமில், எதற்கும் சோர்ந்து போகாத - இயலாது என்று எதையும் விட்டுக் கொடாத ஒரு போராளியாக தன்னை நிலை நிறுத்தினாள் நிதி.

இந்திய இராணுவத்துடன் சண்டை வெடித்த போது, வலிகாமம் எங்கும் நடைபெற்ற சண்டைகளில் நிதியின் பங்கு நிறைந்திருந்தது. அப்போது, மாணவர் அமைப்பின் பொறுப்பாகவிருந்த மேஜர் முரளியின் தலைமையிலான குழுவில் இருந்தாள் நிதி. நாளொன்றிற்கு குறைந்தது மூன்று சண்டைகளிலாவது ஈடுபட்டுக் கொண்டிருந்தது அவர்களின் குழு. ஆயுத தளபாட விநியோகம் சரிவர நடைபெறாதிருந்த அந்த நேரத்தில் தினமும் மூன்று சண்டைகளென்பது கடினமானதுதான். 23.12.1987. அன்றிரவு, சரியான சாப்பாடின்மை, தூக்கமின்மை, நீண்ட நடை, சண்டைகள் என்று அலுத்துச் சோர்ந்திருந்த அவர்கள் நீர்வேலிப் பிரதேசத்தில் இரவைக் கழிக்க முடிவெடுத்தனர்.

அப்போது, அவர்களை விட மோசமான நிலையில் இன்னுமொரு போராளிக்குழுவினர் அங்கு வந்தனர். அவர்களில் காயக்காரர் வேறு. இதனால், தாம் தங்கவிருந்த இடத்தை அந்தக் குழுவிற்குக் கொடுத்துவிட்டு உரும்பிராய் யோகபுரத்தினை சென்றடைந்த போது அவர்கள் சரியாகக் களைத்துப் போயிருந்தனர். துப்பாக்கி ரவைகள், குண்டுகள் என்பன சொற்ப அளவிலேயே இருந்தன. தம்மை இந்திய இராணுவத்தினர் பின்தொடர்வதான ஒரு உள்ளுணர்வு. காவலைப் பலப்படுத்தினர். எவரும் உறங்கவில்லை.

எதிர்பார்த்தது போல சண்டை மூண்டது. பாரிய சுற்றிவளைப்பு. தம்மிடமிருந்த சொற்பளவு ஆயுதங்களுடன் எதிரிக்கு சேதத்தைக் கொடுத்தனர் போராளிகள். நிதியும் மூர்க்கமாகப் போரிட்டாள். எதிரி ஏவிய கைக்குண்டொன்று நிதிக்கு மிக அருகில் வீழ்ந்து வெடித்தது. நிதி 'வீரவேங்கை நிதி' ஆனாள். அன்றைய சண்டையில் அவர்களின் குழுவிலிருந்த இருவரைத் தவிர மற்ற அனைவரும் வீரகாவியமானார்கள். வீரவேங்கை நிதியும் அவளுடன் வித்தான அனைவரும் என்றும் எங்கள் நினைவில் நிறைந்திருப்பர்.

# தமிழர்களின் இராணுவ மரியாதை





உலகிலுள்ள எல்லா இராணுவக் கட்டமைப்பிலும் இராணுவ மரியாதை (சல்யூட்) என்பது மிக முக்கியமானது. இராணுவ மரியாதை இல்லாத ஒரு இராணுவக் கட்டமைப்பை பார்க்கவே முடியாது. மேலைத்தேய நாடுகளில் அரச குடும்பத்தினருக்கும் பிரபுக்களுக்கும் வணக்கம் வைப்பதற்கான மரியாதை முறையை எல்லாப் பொது மக்களும் கடைப்பிடிப்பார்கள். சிறு பிள்ளைகள் கூட இலாவகமாக வணக்கம் வைப்பது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இதுகூட இராணுவ வணக்க முறையை ஒத்ததுதான்.

பல நாடுகளின் இராணுவத்தினரும், சில விடுதலைப் போராட்ட அமைப்பினரும் தத்தமது பாணியில் இராணுவ மரியாதை முறையை மாற்றியமைத்துக் கொண்டுள்ளனர். சகல கட்டமைப்புகளையும் கொண்டு ஒரு அரசை நிர்வகித்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பு உலகின் தலைசிறந்த விடுதலைப் போராட்ட அமைப்புகளில் ஒன்று. ஆரம்பத்தில் எல்லா நாடுகளும் பின்பற்றும் சாதாரண இராணுவ மரியாதை முறைமையே அங்கு பின்பற்றப்பட்டாலும், பின்னர் தலைவர் பிரபாகரன் தமிழர்களுக்குரிய தனிச்சிறப்புடன் ஒரு இராணுவ மரியாதையை நடைமுறைப்படுத்தியிருந்தார். சாதாரணமாக மரியாதை செலுத்தும்போது இரு கைகளையும் நெஞ்சோடு கூப்புவது தமிழர் பண்பாடு. அதனோடு இணைந்ததாக, இடது கையை விரைப்பாக கீழே தொங்கவிட்டு, வலது கையின் பெரு விரல் கூப்புவதுபோல நெஞ்சோடு ஒட்டியிருக்க விறைப்பாக நிற்பதாக இந்த இராணுவ மரியாதை அமைந்துள்ளது. தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலின் போது, தமிழீழ தேசிய நிகழ்வுகளின் போது, அணிவகுப்புகளின்போது என்று பல இடங்களில் இந்த இராணுவ மரியாதை நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதை புகைப்படங்களில் பார்க்கக்கூடியதாக உள்ளது.

## எங்கள் விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்தும் பயணிக்கும் சக்தி

# புலம்பெயர் தமிழ் சமூகத்துக்கு இருக்கின்றது!



தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதிப்பலமாக, புலம்பெயர் தேசத்தையும் அது சார்ந்த கட்டமைப்புக்களையும் இன்று இந்தியாவின் உளவு அமைப்புகள் இலக்கு வைத்திருக்கின்றன. இந்த நடவடிக்கையை வரலாற்றின் படிப்பினைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அதன் தீவிரத் தன்மையை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

ரசியாவின் புலனாய்வு அமைப்புக்களின் ஒன்றான GPU அதாவது நவீன KGB உளவு அமைப்பின் தந்தையாக கருதப்படும் GPU அமைப்பு ஒப்பரேசன் ரஸ்ட் (Operation Trust) என்ற ஒரு உளவு நடவடிக்கையை ஆரம்பிக்கிறது. ரசியாவிற்குள் இருக்கும் ஒரு புரட்சிக்குழுவான MUCR (Monarchist Union of Central Russia) என்ற அமைப்பின் மீதே இந்த நடவடிக்கையை அந்த உளவு அமைப்பு நடத்துகிறது.

மிக இலகுவாக அந்த அமைப்பின் முக்கிய உறுப்பினர்களை கைது செய்து வேலையை முடித்துவிடுகிறது GPU. ஆனால் இதற்கு பின் தான் அவர்களின் பெரும் சூழ்ச்சியே ஆரம்பிக்கிறது. ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்ட MUCR அமைப்பு முழுதாக அழிந்தது GPU வைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. இப்படி இருக்க, ரசியாவின் உளவு அமைப்பு ஒரு சிலரை தானே தெரிவு செய்து அவர்களே MUCR இயக்கத்தை இயக்குவதைப் போல நடிப்பதற்கு தயாராக்குகிறது. தெரிவு செய்யப்பட்டவர்களும், கிடைத்தவரைக்கும் இலாபம் என நினைத்து, “புரட்சி ஓங்குக!, போல்ஸ்விக் அரசு ஒழிக!” என்று சொல்லிக்கொண்டு தங்கள் உளவு வேலையை ஆரம்பித்தார்கள்.

MUCR இயக்கத்தை நடத்துவது போல நாடகமாடி அதனுடன் நேரடியாகவோ மறைமுகமாவோ தொடர்புகொள்ளும் நபர்களையும், மற்றும் பிற இயங்கங்கள் அனைத்தையும் வளைத்து போடும் வேலையை இலாவகமாக ஆரம்பித்தது ரசிய உளவு அமைப்பு.

இவர்களின் மிக முக்கிய இலக்காக இருந்தது ஐரோப்பாவில் இருந்து இயங்கிவந்த கிளர்ச்சிக்கா









ர்களே. ஆகவே, MUCR இன் ஐரோப்பிய பிரிவு என்கின்ற பெயரில் GPU வின் உறுப்பினர்கள் செயற்பட ஆரம்பித்தனர்.

அந்தக் காலப்பகுதியில் மிக எழுச்சியாக செயற்பட்டுக்கொண்டிருந்த 'சிட்னி' என்கிற கிளரச்சியாளனை அணுகினார்கள் உளவுப் பிரிவினர். ரசியாவில் கிளர்ச்சி செய்ய ஆட்கள் இருக்கிறார்கள், ஆயுதக் கிளர்ச்சி ஒன்றைச் செய்து ரசியாவின் ஆட்சியை கைப்பற்றிவிடலாம் எனச் சொல்லி அவனை மூளைச் சலவை செய்தார்கள். ரசியாவிற்குள் அழைத்து வந்து ஒட்டுமொத்த ரசியாவிற்கு எதிரான ஐரோப்பியக் கிளர்ச்சியாளர்களை கைது செய்ததுடன் நிறைவுக்கு வருகிறது இந்த ஒப்பரேசன்.

இன்று, இதே பாணியில், இந்த மாதிரியையே பிரதி செய்து தமிழர்களுடைய புலம்பெயர் கட்டமைப்புக்கள் மீது ஒரு ஒப்பரேசனை ஏவி இருக்கிறது இந்திய உளவு அமைப்பு. சனநாயக ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான அனைத்து கதவுகளும் திறந்து, புலம்பெயர் தேசக் கட்டமைப்புக்கள் அவர்களுக்கான களத்தில் தமிழீழத்துக்கான தமது போராட்டத்தை நடத்தி வருகின்ற இந்த வேளையில், இந்தியாவின் இலக்காக தமிழ் புலம்பெயர் சமூகம் மாறியிருக்கின்றது.

ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு (Research and Analysis Wing) இந்தியாவின் வெளிநாட்டு உளவு நிறுவனமாகும். வெளிநாட்டு உளவுத்துறை, பயங்கரவாத எதிர்ப்பு, அணு-ஆயுத பரவல் தடுப்பு, இந்திய கொள்கை வகுப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் இந்தியாவின் வெளிநாட்டு மூலோபாய நலன்களை முன்னெடுப்பது ஆகியவை இந்த அமைப்பின் முதன்மை பணியாகும். இது இந்தியாவின் அணுசக்தி திட்டத்தின் பாதுகாப்பிலும் ஈடுபட்டுள்ளது. இது 21.09.1968 இல் ஆரம்பிக்கப்பட்டது.

மத்திய புலனாய்வுப் பணியகம் (சிபிஐ) இந்தியாவின் முதன்மையான விசாரணை நிறுவனம் ஆகும். இந்திய அரசின் பணியாளர்கள், பொதுக் குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. முதலில் 1942 இல் லஞ்சம் மற்றும் அரசாங்க ஊழலை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டது. 1965ஆம் ஆண்டில் இது இந்திய அரசாங்கத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட மத்திய சட்டங்களின் மீறல்கள், பல-மாநில ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், பல முகவர் அல்லது சர்வதேச வழக்குகள் ஆகியவற்றை விசாரிப்பதற்கான விரிவாக்கப்பட்ட அதிகார வரம்பைப் பெற்றது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகளில் இருந்து சிபிஐக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சிபிஐ என்பது இண்டர்போல் உடனான தொடர்புக்காக இந்தியாவின் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்ட ஒரு மையமாகும்

காலங்காலமாக தமிழர்கள் தம் கைப்பாவைகளாக இருக்கவேண்டும் என்ற நோக்குடன் ஈழத் தமிழர்களின் முதுகில் குத்தியே பழக்கப்பட்ட இந்தியா இன்று தனது புலனாய்வு அமைப்புக்கள் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற பெயரிலும் அனைத்துலகம் என்ற பெயரிலும் போலியான அறிக்கைகளை வெளியிட்டபடி, புலம்பெயர் சமூக கட்டமைப்புக்களுக்குள் ஊடுருவதற்கு மிகத்தீவிரமாக முயற்சித்து வருவது குறிப்பிடத்தக்கது.

மிகக்குறிப்பாக, ஏற்கனவே களத்தில் இயங்கி வருகின்ற அனைத்துலகத் தொடர்பகக் கட்டமைப்புக்களை சிதைப்பது, தம்மை அந்த இடத்தில் நிறுவி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் செயல் வடிவைச் சிதைப்பது என்ற இரண்டையும் முக்கிய இலக்காக வைத்து இந்த உளவு நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளது இந்தியா.

இந்தியாவின் இந்த உளவு நடவடிக்கையை உடைத்தெறிந்து எங்கள் விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்தும் பயணிக்கும் சக்தி புலம்பெயர் தமிழ் சமூகத்துக்கு இருக்கின்றது என்பதை இந்தியாவின் முகத்தில் அறைந்து சொல்ல வேண்டிய காலம் இது.

# வரலாற்றில் ஒரு நாள்





சிவப்பும் குருத்துப் பச்சையுமாக இலைக் கம்பளங்களைப் போர்த்தியவாறு மரங்கள் எல்லாம் காற்றில் நளினமாக அசைந்தாடிக் கொண்டிருந்தன. பச்சைப் பசேலென்று காற்தடம் படாத புல்வெளிகள் நிலமெங்கும் திட்டுத் திட்டாக விரவிக் கிடந்தன. பழுப்பும் மண்ணிறமுமாக இறந்த இலைகள் வீழ்ந்து கிடப்பதும் ஒரு அழகுதான். கண்ணுக்குத் தெரியாத மறைவிடங்களிலிருந்து பல்வேறு வகைப்பட்ட பறவைகளின் கதம்ப ஒலி மனதை ரம்மியப்படுத்த, குரங்குகள் சில எங்களை எந்நேரமும் வேவு பார்க்கும். இடையிடை அச்சுறுத்தும் தொனியில் மிருகங்களின் உறுமல், பிளிறல் சத்தங்கள். மொத்தத்தில், வசந்த காலம் காடு பூராவும் சிதறிக் கிடந்து மனதைக் கொள்ளை கொள்ளும். அது மணலாற்றுக் காட்டுப் பகுதி.

காட்டுக்கு வெளியேயுள்ள தமிழ்ப் பிரதேசம் எங்கும், ‘தேடல்’ என்ற போர்வையில் எமது மக்களை கொன்றும் சித்திரவதை செய்தும் அட்டுளியம் செய்து கொண்டிருந்தனர் அமைதிப்படை என்ற போர்வையில் வந்த இந்தியப் படையினர். அவர்களை ஓடோட விரட்டும் மூலோபாயத்தினைக் கனகச்சிதமாக திட்டமிட்டு நகர்த்துவதற்காக, இயக்கம் ‘கரந்தடிப்படை’யாக மாறியிருந்தது. மணலாற்றுக் காட்டினுள் நிலைகொண்டு போரை வழிநடத்திக் கொண்டிருந்தார் எமது தேசியத் தலைவர்.

ஏற்கனவே அதனை மோப்பம் பிடித்து விட்ட இந்தியப் படையினர் காட்டையும் முற்றுகைக்கு உள்ளாக்கியிருந்தனர். ஆனால் உள்ளே நீங்கள் எந்தப் பதற்றத்தையுமே காண முடியாது. தலைவர் எவ்வளவுக்கு எவ்வளவு நிதானத்துடனும் கண்டிப்புடனும் நடந்து கொள்வாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அந்த இடம் கேலியும் கிண்டலுமாக மகிழ்ச்சியான ஒரு இடமாகவிருக்கும். காட்டினுள் அனைத்து வேலைகளுமே எங்களுக்குப் புதியவை. நாங்கள் இப்படிச் செய்வோம், எங்களால் இவ்வாறு செய்ய முடியும் என்று நினைத்தும் பார்த்திராதவை. ஆனாலும், ஒரு போராளிகூட மனம் சோர்ந்ததில்லை, முடியுமா என்று சந்தேகம் கொண்டதில்லை. எப்போதுமே சந்தோசம் நிரம்பியிருந்த அந்த இடம் ஏதோ போட்டி விளையாட்டுகளுக்கு நாங்கள் தயாராக நிற்பது போல எப்போதும் ஒரு எதிர்பார்ப்பையே தூண்டியது.

வெயில் கொழுத்திக் கொண்டிருந்த ஒரு பொழுதில், முகாமின் சமையல் இடத்திற்கு அருகில் ஒரு கிணறு தேவை என்ற நிலையில் கிணறு தோண்ட ஆரம்பித்தோம். அது பொதுவான இடமாகையால் பையன்கள் பெண்கள் இரு பகுதியினரும் இணைந்து வேலையில் இறங்கினர். பையன்கள் தோண்டினால் பெண்கள் மண்ணை வாரி எடுத்துச் சென்று தூரக் கொட்டுவர், பெண்கள் வெட்டினால் பையன்கள் மண் சுமப்பர். தலைவர் உற்சாகமூட்ட... கிணறு ஆழமாகியது. உள்ளே நிலத்தடி மண்ணின் நிறம் பல்வேறு வண்ணப் படைகளாக வந்து கொண்டிருந்தது. மண்ணிறம், சாம்பல், கறுப்பு, கத்தரிப்பூ இறுதியில் சிவப்பு மண் வந்த

# வரலாற்றில் ஒரு நாள்

போது நீரூற்று பீறிட்டது. 'டப்ளின் கிணற்றில் புரட்சி வெடித்து விட்டது!' என்று எல்லோரும் ஆர்ப்பரித்தனர். 'டப்ளின்' அந்த முகாமின் சங்கேதப் பெயர்.

தண்ணீர் வந்தபின் மண் ஈரமாகி சுமப்பது கடினமாகியது. பையன்கள் சுமந்து கொண்டிருந்தனர். நீண்ட தடியில் சாக்கினைக் கட்டி, மண்ணை நிரப்பி ஒரேயளவு உயரமுள்ளவர்கள் இருவர் இருவராக சுமப்பதுதான் வழமை. தடியின் முற்புறம் நின்ற 'ஜோய்', 'எனக்கு பாரம் வரல்ல, யார் மாறி நிக்கிறீங்க?' என்று வினவியபோது பதிலே இல்லை. பார்த்தால், தடியின் பின்புறத்தில் தலைவர் மண்ணைச் சுமந்து செல்வது தெரிந்தது. எவ்வளவு தடுத்தும் அந்த வேலை முழுவதையும் முடிக்கும் வரை அவர் விடவேயில்லை.



இதுதான் எமது தேசியத் தலைவர். அவர் கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டு இருப்பவரல்ல. எங்களோடு இணைந்து அத்தனையையும் செய்பவர். எளிமையின் இருப்பிடமான அவரில் 'தேசியத் தலைவர்' என்ற மரியாதையையும் மீறி 'அண்ணா' என்ற பாசம்தான் எப்போதும் போராளிகளிடையே ஓங்கி நிற்கும்.

பிறிதொரு நாள். அன்று சமையற் குழுவில் இருந்தவர்களுக்கு பெரிய அதிர்ச்சி. அதிகாலையில் சமையற் கொட்டிலுக்குப் போனால் அங்கு அண்ணா ஏற்கனவே இருந்தார். எவரும் உள்ளே வரக் கூடாது என்று கண்டிப்பாக உத்தரவு போட்டு விட்டார். சாப்பிடுவதைத் தவிர எங்களுக்கு அங்கு எந்த வேலை செய்யவும் அனுமதியில்லை. தன் கையாலேயே கேட்டுக் கேட்டுப் பரிமாறினார். வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவம். இப்படி எண்ணற்ற சம்பவங்கள். போரியலில் மட்டுமல்ல. பாசத்திலும் நேசத்திலும் ஈடு இணையற்றவர் தலைவர்.

இராணுவச் சீருடையினுள் கடமையும் கண்ணியமும் கட்டுப்பாடும் நிறைந்த, போர்க்குணம் மிக்க ஒரு போராளியாகத் தென்படும் எங்கள் தலைவர் தன் உடைகளிலுள்ள கிழிசலைத் தானே தைத்து, தோய்த்து அணிந்து கொள்ளும் எளிமை நிறைந்த மனிதர். இரக்க குணமும் பாசமும் கொண்டவர். அவரைத் 'தாயுமானவன்' என்பதா 'தகப்பன் சாமி' என்பதா?



## தமிழ்த் தேசிய விடுதலைப் பயணிப்பில்

# போர்க்கால இதழ்கள்




### 1. அறிமுகம் :

ஈழத் தமிழினம் தனது உரிமைக்கான போராட்டத்தைத் தொடங்கி அரை நூற்றாண்டைக் கடந்து நிற்கின்றது. மக்களின் விடுதலைக்கான பயணிப்பில் இன்றைய காலம் மாற்றத்திற்குரிய, சர்வதேசத்தில் முக்கியத்துவம் மிகு காலகட்டம். உலகால் தமிழ்த் தேசிய மக்களின் போராட்டத்தை புறந்தள்ள முடியாதவாறான கனதியான சூழ்நிலைக்குள் ஈர்க்கப்பட்டுள்ள காலம். மக்கள் மயப்பட்ட தமிழ்த் தேசியப் பயணிப்புகளுள் உலகின் அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பு இருப்பதை அவதானிக்கலாம். நீண்ட வரலாற்றைக் கொண்ட ஓர் இனத்தின் இத்தகு துயரப்பட்ட பயணிப்புக்கு கொடுக்கப்பட்ட விலைமதிப்புக்கள் யாவை? அவற்றுக்குப் பின்னால் இருந்த பின்புலக் காரணிகள் யாவை? அவற்றின் அகப்புறச் செல்வாக்குகள் எவை? இது எவ்வாறு நிகழ்ந்தது. இவ்விடத்தில் போர்க்கால இதழியல்களின் வகிபாகம் என்ன? ஆகியவற்றை ஒரு தொகு நிலையில் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### 2. தொடர்பூடகங்கள் :

தொடர்பூடகங்களின் வளர்ச்சி பரந்து பட்ட உலகை ஒரு சமூகம் என்ற நிலைக்கு உள்ளாக்கியுள்ளது. உலகின் பரப்பை ஒரு காலகட்டத்தில் அறியமுடியாதிருந்த மனிதனுக்கு இப்போது உலகின் எந்தவொரு நிகழ்வையும் உடனே பார்க்கும் வாய்ப்பு எட்டியிருக்கின்றது.

மனித உறவின் வட்டம் சர்வதேச அளவில் விரிவடைந்து விட்டது. இன்றுள்ள சமூகம் தகவல் சமூகம். தகவல் பலம் சமூக, அரசியல், போராட்ட, பொருளாதார, மத நிர்ணய சக்தியாக மாற்றம் பெற்று விட்டது.

ஒரு சமூகத்தின் மனித வாழ்வின் உறவு வட்டம் சர்வதேச தரநிர்ணயம் செய்யப்படுகின்றது. இதற்கெல்லாம் முதன்மைக் காரணியாகச் செயற்படு நிலையிலுள்ளவைகள் தொடர்பூடகங்களே. தகவல் அடிப்படையிலான சமூக மாற்றமும், தகவல் அடிப்படையிலான அரசியலும் இன்றைய உலகின் நடைமுறையாகியுள்ளது. தகவலை கடத்துகின்ற தொடர்பூடகங்கள் மனித வாழ்வின் தீர்மான சக்தியாக உருப்பெற்றுள்ளன.

ஒரு மாறும் சமூகம் அல்லது மாற்றத்தை அரசியலாக, பொருளாதாரமாக, மொழியாக, இனத்தின் விடுதலையாக, தேசிய அங்கீகாரமாகக் கருதுகின்ற போது வெகுசனத் தொடர்புகளின்றி அது நடந்தேற முடியாது. ஆகவே ஒரு இனத்தின் மாற்றத்திற்கான முனைப்பில் ஈடுபட்டவர்கள் வெகுசன ஊடகங்களினூடாகத் தங்களின் மாற்றத்தினை மிக வேகமாக நகர்த்தவும் அதனூடாகத் தங்களின் பயணிப்பின் தாக்கங்களையும் வெளிக்கொணர்ந்தனர். இது உலக வரலாற்றிலும் இடம்பெற்றது. ஓர் இன மக்களிடையேயான நம்பிக்கைகள், நடத்தைகள், நாகரிகம், கலாசாரம், சமூக அமைப்பு என எதிலும் தாக்கம் விளைவிக்கக் கூடிய சக்தியினை கொண்டுள்ளது. மனித வாழ்வில் பிரிக்கப்படமுடியாத ஒன்றாக, ஒரு நாட்டின் எழுச்சியோடும் வீழ்ச்சியோடும் தொடர்புபட்டதாக வெகுசன ஊடகங்கள் இன்றுள்ளன.




குறிப்பாக முதலாம் உலகயுத்த காலத்திலும் அதற்குப் பின்னரும் இத்தாலி, ஜேர்மன், ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் ஊடகங்களைக் குறிப் பாக இதழியலை உச்சளவில் பயன்படுத்திச் செய்யப் பிரச்சார கருத்து உருவாக்கங்கள் தீவிர வளர்ச்சிக்கும் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் தயார்படுத்தலுக்கும் இட்டுச்சென்றன. இது தொட ர்பில் ஹிட்லர் தனது "மெயின் காம்ப்" ( mein Kamf ) என்பதில் விரித்துக் கூறியுள்ளார்.

எனவே வெகுசன ஊடகங்கள் மனிதவாழ்வின் மறுக்கப்பட முடியாத ஒரு தீர்க்கமான சக்தி. சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளின் நிர்ணயசக்தி ஒன்றின் வெற்றிக்கும் தோல்விக்கும் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் வெகுசன ஊடகங்களால் பங்காற்ற முடியும்.

இத்தகு முன்னுதாரணங்கள் தமிழ்த் தேசிய விடு-தலை வரலாற்றிலும் தமிழர்களின் போரியல் கால கட்டத்திலும் பொருந்துவன.

வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க ஈழத்தமிழர்கள் எத்தனையோ சாதனைமிகு வரலாறுகளைக் கண் டுள்ள போதிலும் அவற்றுக்கான ஆவணங்களைப் பேணுவதிலோ, பதிவுகளை மேற்கொள்வதிலோ அக்கறை காட்டியது மிகவும் குறைவு, வேதனை-க்கு உரியது. இந்த இடர்ப்பாடு ஊடகம் மற்றும் போரியல் இதழியல் தொடர்பிலும் காணப்படுகி-ன்றது.

ஈழத்தமிழ் மக்களின் தமிழ்த் தேசியம் நோக்கிய போராட்டத்தை அறவழிப் போராட்டம், போரியல் போராட்டம் (ஆயுத) என இரு கட்டங்களாக வகு-க்கலாம். தந்தை செல்வா தலைமையிலான இரு தசாப்தகாலம் அறவழிப் போராட்டத்தைத் தமி ழ்த் தேசிய விடுதலைப் போராட்டமாகப் பார்ப்-பது தொடர்பில் சிக்கலுண்டு. மொழியுரிமை, நிலவுரிமை, கல்வியுரிமை ஆகிய கோரிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் 1974ஆம் ஆண்டு தமிழராய்ச்சி மாநாடு ஏற்படுத்திய வடுவுடன் ஆயுதப் போராட்டத்திற் கான வலுச்சேர்க்கப்பட்டு 1983 இல் ஏற்பட்ட ஆடிக் கலவரத்துடன் தீவிரம் பெற்றது. அதாவது ஆயுதப் போராட்டத்திற்கான நியாயத் தன்மையையும் அதுவே பெற்றுத் தந்தது. குறித்த இரண்டு போரா ட்ட காலகட்டங்களில் இருந்தும் பின்னையதே தொடர்ச்சியானதாகவும் இடைவிடாததாகவும் பல சாதனைகளையும் வேதனைகளையும் தாங்கிய தாகவும் அமைந்திருந்தது.

இக் காலகட்டத்தில்தான் தமிழ்த் தேசிய விடு-தலைப் பயணிப்பில் பல்வேறு பெயர்களுடன் விடு-தலைசார் அமைப்புக்கள், இயக்கங்கள் முனை-ப்புப் பெற்றன. இவை தமது தத்துவார்த்தக் கருத்து உருவாக்கங்களை வெகுசனப்படுத்த முனைந்தபோது மேடைப்பேச்சு, கூட்டங்கள், கருத்தரங்குகள் என்பவற்றுக்கு அப்பால் மக்களின் தேவைகள் மற்றும் அபிலாசைகளையும் தங்க-ளின் அமைப்புக்கள் மற்றும் இயக்கங்கள் சார்பாக எண்ணங்களையும் வெளிப்படுத்த அல்லது மக்க-ளுக்கு சொல்ல முனைந்தபோது போரியல் சார் இதழ்கள் தோற்றம் பெற்றன.

இதழியல் வரலாற்றில் தமிழ்த் தேசிய விடுதலை மற்றும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் தோன்றிய இதழ்கள் பின்வரும் மறுமலர்ச்சி மாற்றங்களையும், இலக்கிய வரலாற்றுப் பின்னணியில் புதிய போக் குகள் மற்றும் புதிய வரவுகளைத் தமிழுக்குத் தந்தன. குறிப்பாக,

- தங்களது அமைப்பின் கொள்கை, கோட்பாடு-களை, அரசியல் சித்தாந்தத்தை முன்னெடுப்புச் செய்தமை.

- இளம் எழுத்தாளர்களுக்கான களமாக அமைந்-தமை.

- போராட்டச் சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பியமை.

- போராட்டத்திற்கான வலுச் சேர்க்கும் உந்து சக்தியாகச் செயற்பட்டமை.

- இலக்கியத்திற்கான புதிய பொருள், புதிய வடிவம், புதிய மரபு முதலியன தோன்றுவதற்கான தடத்தை மேற்கொண்டமை.

- மக்களின் அவலவாழ்வு, பேரினவாதக் கொடு ரங்கள், தமிழ் மக்களது சாதனைகள் மற்றும் வேதனைகளை வெளிப்படுத்தும் அறிகைக்கான செயலொழுங்கை ஏற்படுத்தியமை.

- வெளியுலகத் தேவைகளையும் தமிழ்த் தேசி யத்தின் அவசியப்பாட்டையும் சகலரும் அறியும் வழியாகப் பயன்பெற்றமை.

- நாளாந்தச் செய்திகளை வெளிக் கொணர்ந்-தமை.

ஆகிய காரண காரியங்களினால் தமிழ்த் தேசிய விடுதலைப் பயணிப்பில் போர்க்கால இதழ்கள் முதன்மைச் சக்தியாக, தமிழ் இனத்தின் பலமாக நிலைபெறத் தொடங்கின.

### 3. பத்திரிகைகள் :

1956 முதல் 1977 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வரையான அறவழிப் போராட்டக் காலகட்டத்தில் தமிழ்த் தேசியம் என்ற ஒரு கருத்துரு முழுமையாக உருவாகி இருக்கவில்லை.

தமிழரசுக் கட்சி தலைமை தாங்கி நடாத்திய போராட்டங்களை ஒரு தொடர்ச்சியான இடைய-றாத போராட்டமாக நோக்க முடியாதநிலையில் அத்தகைய கருத்தை வழி மொழிந்து எழுதிய இதழியலாளர்களின் வகிபாகம் இக்காலத்தில் பெரிதும் வெளிப்படவில்லை.

தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரி கையான சுதந்திரன், பின்னாளில் வெளியான தீப் பொறி மற்றும் ஒரு தீப்பொறி ஆகியவையே இந்த அறவழிப் போராட்டங்களை ஆதரித்து எழுதி வந்தன. கோவை மகேசன், எம்.கே.அந்தனிசில் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டுவந்த இந்தப் பத்தி ரிகைகள் செய்திப் பத்திரிகைகளாக அன்றி கட்சிப் பிரசாரப் பத்திரிகைகளாகவே கருத்துரு வாக்கங்களை முன்னெடுத்தன.

அதேவேளை, தேசியப் பத்திரிகைகள் என்ற வரையறைக்குள் அடக்கப்பட்டு இலங்கைத் தீவு முழுமைக்குமான வாசகர்களைக் கொண்டிருந்த தினகரன், வீரகேசரி, தினபதி ஆகிய தினசரிகள் தமிழ் மக்களின் அறவழிப் போராட்டச் செய்தி-


சுதந்திரன்
SUTANTIRAN
தொலைபேசி: 23411
விலை சதம் 25
தந்தை செல்வாவுக்கு பிரமாண்டமான வரவேற்பு!
தொண்டமான், சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்!
"தமிழினம் கோருவது சுயநிர்ணய உரிமை!
இதுவே எனது கொள்கை! முடியுமானால் எதிர்த்து போட்டியிட்டுப் பாருங்கள்!"
ஆட்சியாளர்களுக்கு செல்வா சவால்! பதவி துறந்து அறிக்கை!
உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சிறையில் இன்று 121வது நாள்!

களை அளிக்கை செய்து வந்தனவே தவிர அந்தச் செய்திகளின் ஊடாகத் தமிழ்த் தேசியம் சார்ந்த கருத்தைக் கட்டியெழுப்ப முனையவில்லை. மாறாக, இலங்கைத் தேசியம் என்ற கருத்துருவைக் கட்டி வளர்ப்பதாகவே அந்த எழுத்துக்கள் அமைந்திருந்தன. 1977 பொதுத்தேர்தல் முதல் 1983 ஆடி வரையான காலகட்டத்தை தமிழ் ஊடகங்க-ளினதும் இதழியலாளர்களினதும் நிலைமாறும் காலகட்டம் எனலாம். இக் காலகட்டத்தில்தான் தமிழ் மக்களின் தலைமை அரசியல்வாதிகளின் கரங்களில் இருந்து விலகி ஆயுதபாணிகளின் கரங்களைச் சென்றடைந்தது. அத்தோடு தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் சிங்கள மக்களோடு இணைந்து வாழமுடியாது என்ற முடிவை நோக்கி யும் நகர்ந்தது.

தனிநாடு (தமிழீழம்) அமைப்பதொன்றே தமிழ் மக்கள் நிம்மதியாக வாழச் சாத்தியமான ஒரேவழி. அதுவும் போர் ஒன்றின் மூலமே சாத்தியமாகும் என்ற கருத்து தமிழர்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் மேலோங்கிய காலம்.

இத்தகைய முக்கியமான கால கட்டத்தில் கூட தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக நிலவிய இக் கருத்துருவாக்கத்திற்கு உத்வேகம் தரும் வகை யில் எந்தவொரு குறித்த பத்திரிகைகளும் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

அதேவேளை, தமிழ்த் தேசிய எழுச்சி பற்றிப் பேசிவந்த தமிழரசுக் கட்சிப் பத்திரிகைகள் இளைஞர்களின் கருத்துக்களுக்குப் பதில் அளிப்-பதில் மும்முரமாக ஈடுபட்டு வந்தன.

1983 ஆடியில் தமிழர்களுக்கு எதிராக பேரின வாதத்தின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட இனப்படு கொலை களத்தில் அனைத்தையும் மாற்றிய-மைத்தது. போரியல் ரீதியிலான தாக்குதல்கள், அரசியல் முனைப்புகள், தமிழ்த் தேசிய எழுச்சி எனப் பல முனைகளிலும் ஏற்பட்ட பாய்ச்சல் இதழி யல்களையும் விட்டு வைக்கவில்லை. அனைத் தையும் அடிப்படையில் இருந்தே மாற்றியமை-க்கும் தன்மை கொண்ட புரட்சி, இதழியலாளர்க-ளின் வரவுக்காகக் காத்திருக்கவில்லை. புரட்சி யாளர்கள் மத்தியில் இருந்தே தேசியத்தை ஆதரி-க்கும் ஆற்றலுள்ள இதழியலாளர்கள் உருவாகி னார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் அன்ரன் பாலசி ங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த உணர்வு, குமணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தால் ஆரம்பிக்கப்பட்ட புதிய பாதை, ஈழப் புரட்சி-கர மாணவர் அமைப்பினால் (ஈரோஸ்) பாலநடராஜ

ஐயரை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட தர்க்கீகம், சுந்தர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட சஞ்சிகையான பாலம், தமிழீழ விடுதலை இயக்கத்தினால் (ரெலோ) வெளி யிடப்பட்ட எழுச்சி, ஈழ மாணவர் பொது மன்றத்தி னால் சிறிதரன் (சுகு) அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட ஈழ மாணவர் குரல் ஆகிய ஆரம்பகாலப் பத்திரிகைகள் தமிழ்த் தேசிய விடுதலைப் பயணிப்பில் போர்க்கால இதழ்களாக தோற்றம் பெற்றன.

பின்னாளில் வெளிவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் புலிகள், சுதந்திரப் பறவைகள், களத்தில் மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் (ஈ.பி.ஆர்.எல்.எப்) பத்மநாபாவை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட ஈழச் செய்திகள், சமகண்ணன் (தாஸ்) அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட கண்ணோட்டம், சிதம்பரப்பிள்ளை சிவகுமாரை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட புதிய கண்ணோட்டம், தமிழீழ விடுதலைப் புலிகளால் மட்டக்களப்பில் வெளியிடப்பட்ட விடுதலைச்சுடர் (1985-1986), தாய் மண், சுதந்திரச்சுடர் (1990-1992) ஆகியவை உட்பட பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் இளம் இதழிய










லாளர்களை, கட்டுரையாளர்களை, கவிஞர்களை, சிறுகதையாளர்களை ஈழத் தமிழுக்கும் தமிழ்த் தேசியத்திற்கும் அறிமுகஞ் செய்து வைத்தன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் வானொலியை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமே அறிமுகஞ் செய்தது. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் சிற்றலையில் ஒலிபரப்புச் செய்யப்பட்ட இவ் வானொலி 1984, 85 இல் இயங்கியது. இரண்டாவது வானொலியை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆரம்பித்தது. பின்னாளில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட புலிகளின்குரல், நிதர்சனம் தொலைக்காட்சி ஆகியவை தமிழீழ வானொலி, தமிழீழத் தொலைக்காட்சி எனப் பரிணாமம் அடைந்தன. புலிகளின் குரல் வானொலி தற்போதும் இணையத் தளம் ஊடாக ஒலித்துக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதே வேளை, தமிழீழப் பொதுவுடமைக் கட்சி என்ற பெயரில் செயற்பட்ட ஒரு அமைப்பும் தனியான ஒரு வானொலியை நடாத்தியதாக அறிய முடிகின்ற போதிலும் அது தொடர்பான செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை.

### 4. சஞ்சிகைகள் :

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் ஈழவிடுதலையின் போரியல் கடுமையாக நடந்து கொண்டிருந்த வேளைகளில்தான் சஞ்சிகைகளின் வரவு வேகமாக முனைப்புப் பெறத் தொடங்கியது.

விடுதலைப் போராட்டம் ஒன்றின்போது கலை, இலக்கியப் பங்களிப்பின் முக்கியத்துவமும் அவசியப்பாடும் மிகப் பெரியது. இந்தப் பங்களிப்பை நிறைவேற்றும் பொருட்டுச் சஞ்சிகைகளின் வரவு முக்கியமாயிற்று.

குறிப்பாகச் சஞ்சிகைகள்:

- தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை உத்வேகப்படுத்தவும் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையைப் பகிரங்கப்படுத்தி அதை எதிர்க்கவும் வேண்டிய தேவைப்பாடு.

- போராடும் போரியல் காலத்தின் பதிவாகப் போராட்டச் செயற்பாடுகளை, போராட்டக் கால கட்டத்தை, போராட்ட வாழ்வை பதிவு செய்ய வேண்டியதன் அவசியப்பாடு.

- சமூக, அரசியல், இலக்கிய விடயங்களில் உலக ரீதியிலும் தமிழ்ப் பரப்பிலும் ஏற்பட்டு வரும் வளர்ச்சிகள் மற்றும் மாற்றங்களில் கவனம் கொண்டு சமாந்திரமாகத் தன்னையும் தன் சூழலையும் வளப்படுத்துதல். ஆகிய அடிப்படைகளுடன் போரியல் கால சஞ்சிகைகள் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் வெளிவரத் தொடங்கின.

குறிப்பாக:

### 4.1 வெளிச்சம் :

தமிழர்களின் கலை, பண்பாடு செம்மையானது. ஈழத்துத் தமிழ் மக்களின் கலையும் பண்பாடும் தனித்துவமானது. வெளிச்சம் இதழ் A4 வடிவில் ஒவ்வொரு இதழும் 60 பக்கங்களுக்கு மேற்பட்டே வெளிவந்ததென்பது குறிப்பிடத்தக்கது. 75ஆவது




இதழ் வெளிச்சம் 'பவள இதழ்' 2001 என்ற தலைப்பில் 300 பக்கங்களில் வெளிவந்தது மிகுதியான சிறப்பம்சமாகும். இதே போன்று பத்து இதழ்கள் குறித்த காலத்தில் ஏற்பட்ட சிறப்பு நிகழ்வுகளின் இதழ்களாக அதிக பக்கங்களுடன் வெளிவந்தன. ஒவ்வொரு சிறப்பிதழ்களும் அதனதன் முதன்மை விடயங்கள் பேசப்பட்டிருந்தன. வெளிச்சம் சிறப்பிதழ்கள் மட்டுமின்றி பின்வரும் விடயங்களுக்கு ஒவ்வொரு இதழிலும் முதன்மை கொடுத்திருந்தன.

நேர்காணல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், கருத்தாடல்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், சந்திப்புக்கள், நூல் வெளியீடுகள், வாசகர் வட்டங்கள் என எல்லா விடயங்களுக்கும் முதன்மை கொடுத்திருப்பதை காணலாம்.

நேர்காணல்கள் 41 வெளிச்சம் இதழில் வெளிவந்திருப்பது குறிப்பிடத் தக்கது. ஈழத்தின் கலை இலக்கியத்தின் ஆளுமையாளர்களுடன் இந்நேர்காணல்கள் இடம் பெற்றிருந்தன. பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் அ.சண்முகதாஸ், கவிஞர் முருகையன், இசைப்பிரியன், கண்ணன், கவிஞர் சோ. பத்மநாதன், குழந்தை ம. சண்முகலிங்கம், கோமல் சுவாமிநாதன், கோகிலா மகேந்திரன் எனப் பலரின் நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளன.

வெளிச்சம் இதழில் 256 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. மூத்த சிறுகதை ஆசிரியர் வரதர், அ.செ.மு முதல் சாந்தன் வரையில் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதையாளர்கள் எழுதியுள்ளனர்.

ஈழத்துக் கவிதைகளின் இன்னொரு காலநகர்வினை வெளிச்சம் கவிதைகள் வெளிப்படுத்தியுள்ளன. 200 கவிஞர்களுக்கு மேல் கவிதைகளை எழுதியுள்ளனர். ஆயிரத்திற்கு மேற்பட்ட கவிதைகள் வெளிவந்துள்ளன போர் அனுபவங்கள், இடப்பெயர்வுகள், அகதி வாழ்வு, போராளிகளுக்கிடையிலான உறவும் உணர்வும், தாயக நேசிப்பு, அரசியல் விசாரிப்புக்கள், கொடூரமான விமானத் தாக்குதலின் சித்திரிப்பு எனப் பல்வேறு புதிய உள்ளடக்கங்கள் கவிதைகளில் பேசப்பட்டுள்ளன.

இதே போன்று 200 மேற்பட்ட கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஈழத்து அறிஞர்கள் முதல் தமிழக அறிஞர்கள் வரையில் இவற்றில் எழுதியுள்ளனர். இவற்றை விட ஓவியர்கள், புகைப்படங்கள்,, கருத்தாடல்கள், சந்திப்புக்கள், நூல்வெளியீடுகள் (குறிப்பாக வெளிச்சம் சிறுகதைகள், வெளிச்சம் கவிதைகள், செம்மணி, ஆனையிறவு, வாசல் ஒவ்வொன்றும் என்பன குறிப்பிடத்தக்கன).

எனவே ஈழத்துப் போரியல்கால கலை, பண்பாட்டு வளர்ச்சியில் வெளிச்சம் சஞ்சிகை பாரிய சமூகப் பொறுப்புணர்வு, கலை, பண்பாட்டுப் பாதுகாப்பு உணர்வு ஆகியவற்றை நிறைவேற்றியிருக்கின்றது.

### 4.2 நாற்று :

1995ஆம் ஆண்டு தை-மாசியில் முதல் இதழ் வெளி வந்தது. இரு மாதங்களுக்கு ஒரு இதழ் எனும் வகையில் 2008ஆம் ஆண்டு வரையில் 30 இதழ்கள் வெளிவந்தன. பெண்கள் ஆய்வு நிறுவனம் இதனை வெளியிட்டது. முதல் இதழ் கல்லியங்காடு, கோப் பாய், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடங்கி தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனம், கோம்பா வில், புதுக்குடியிருப்பு என்ற முகவரியிலிருந்து 30 வது இதழ் வெளிவந்தது. ஒவ்வொரு இதழிலும் 'பெருமைக்குரிய பெண்மணி' என்ற மகுடத்தில் உலக வரலாற்றில் பேசப்படுகின்ற பெண்ணின் வரலாறு வெளிவந்து இருக்கின்றது. நாற்று பெண்களின் மேம்பாட்டில் முக்கியமானது. முதல் இதழில் திருமதி ஸாரா ஜோசப் அவர்களோடு தொடங்கி சகோதரி நிவேதிதா, ஜான்சிராணி, ஆங் சாங் சூகி, அன்னை திரேசா, பேர்ள். எஸ். பக், மருத்துவர் ஜொய்செலின் எல்டேர்ஸ், முதலியோர் இதழ்களை அலங்கரித்துள்ளனர்.

சிறுகதைகள், நேர்காணல்கள், கவிதைகள், சமூக, பொருளாதார, பெண்ணியம் சார்பான கட்டுரைகள் 'நாற்று' இதழில் அதிகமாக வெளிவந்துள்ளன. குறிப்பாக ஒவ்வொரு இதழும் 60-80 பக்கங்களுக்கு குறையாத வகையில் B5 அளவில் வெளிவந்துள்ளது. நாற்று இதழ்களினூடாக பெண்களின் சமூக மாற்றம், போரியல் வரலாற்றில் பெண்களின் வகிபாகம் மற்றும் துன்ப அவலங்கள், பொருளாதாரத்தில் பெண்களின் பங்கு, பெண்களும் கல்வியும் முதலிய பல்வேறு விடயங்களை இவ் விதழ்கள் வெளிக்கொணர்ந்துள்ளன. பெண்ணியம் சார் கருத்துருவாக்கத்திற்கு நாற்று முதன்மை இடத்தை வழங்கியுள்ளது.

### 4.3 விளக்கு :

விளக்கு முதல் இதழ் 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சிற்பி அவர்களை ஆசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து தமிழீழக் கல்விக் கழகத்தினால் வெளியிடப்பட்டது. 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் நெடுந்தீவு மகேஸ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 2008ஆம் ஆண்டு வரையில் கிளிநொச்சியை மையமாகக் கொண்டு 30 இதழ்கள் வெளிவந்தன. அகவிழி, ஆசிரியம் ஆகிய கல்வியியல் சார்பான இதழ்களுக்கு நிகராக விளக்கு ஈழத்தில் கல்வியியல் சார்பான முதல் இதழாக வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் கல்வி மற்றும் வாண்மைத்துவம், கல்விப் பிரச்சினைகள், வகுப்பறை மற்றும் கற்பித்தல் சார்பான முகாமைத்துவம் தொடர்பான கட்டுரைகள் வெளிவந்தன.

அத்துடன் கற்றல் கற்பித்தல் தொடர்பான கதைப் பொருளை மையப்படுத்திய சிறுகதைகள், கவிதைகள் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு இதழும் 60 பக்கங்கள் கொண்டதாக A4 அளவில் வெளிவந்தது.

### 4.4 சாளரம்

"சாளரம்" முழுமையான மாணவர்கள் சார்பான இதழாகும். அதாவது கல்வியில் மாணவர்கள் காட்ட வேண்டிய அக்கறைகள் மற்றும் மாணவர்களின் கடமைப்பாடுகள் மற்றும் விழுமியங்கள், நாளைய தலைவர்கள் என்ற வகையில் ஆளுமை விருத்தி, தலைமைத்துவம், சமூகப் பெறுமானம், சமூக அக்கறை, தேசியப்பற்று என்பன வெளிக் கொணரப்பட்டன. 1991 யூன் மாதம் முதல் இதழ் வெளி வந்தது. விவேக் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 25 இதழ்கள் 2007 ஆம் ஆண்டு வரையில் வெளிவந்தன.

### 4.5 வழிகாட்டி

இவ்விதழ் முழுமையான அரசியற்கல்வி சார்ந்த இதழாகும். அதாவது தூயவன் அரசறிவியல் கல்லூரியிலிருந்து வெளி வந்தது. தேசிய, மற்றும் சர்வதேச அரசியல் மாற்றங்கள் மற்றும் புறந்தள்ளப்பட்ட விடுதலைப் போராட்ட உலக வரலாறுகள், போரியல் சாதனைகள், உலகப்போரின் திருப்பு முனைகள் என்பன இவ்விதழில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. உலகத் தலைவர்களின் வரலாறுகள், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மரணித்தவர்களின் வரலாறுகள் என்பன வெளிவந்தன. கவிதை மற்றும் சிறுகதைகளும் வழிகாட்டியில் வந்திருந்தன.

### 4.6 ஊக்கி

முழுமையான சமூக பொருளாதார அபிவிருத்தி சார்பான இதழாகும். இவ்விதழ் பொருமியம் என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது.

### 5.முடிவுரை :

ஒரு சமூகத்தின் குறித்த காலத்தின் அசைவியக்கம் தொடர்பான அறிக்கைக்கு அக்காலத்தில் வெளிவந்த தொடர்பூடகங்களே சாட்சியங்கள் என்பர். அதற்கு 1990 முதல் 2009 வரையான காலப் பகுதியின் தமிழ்த் தேசியம் சார்பான போரியல் வரலாற்றினையும் அதன் அசைவு இயக்கத்தையும்

அறிந்து கொள்வதற்கு அந்த சமூக அமைப்பில் சமூகக் கட்டுமானத்தில் வெளிப்பட்ட அல்லது வெளிக் கொணரப்பட்ட பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் அதாவது இதழ்கள் உற்ற சாட்சி யங்களாக உள்ளன.

இவை பற்றிய ஆய்வுகள் முறைமையாக மேற் கொள்ளப்படும்போது அதன் அசைவியக்கமும், அது சமூகத்தில் ஏற்படுத்திய நகர்வுகளும், தமிழ்த் தேசிய விடுதலைப் பயணிப்பில் அதன் வகிபாகமும் சரியாகப் புரிந்து கொள்ளப்படும். இதற்கு வெளி-வந்தவைகள் சரியாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இவற்றின் உரித்துடையோர் இல்லையாயினும் யாரோ ஒருவரின் அல்லது பலரின் பாதுகாவலில் இவைகள் இருக்கும். ஆகவே இதழ்கள், பத்தி ரிகைகள் தொடர்பில் முழுமையான ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இக்கட்டுரை ஒரு தொகுநிலை ஆய்வே தவிர திறன்நிலை சார்ந்த ஆய்வல்ல. இவை எல்லாவற்றையும் மீளப் பார்ப்-பதற்கான ஒரு முயற்சி, ஆனால் ஆய்வுநிலையில் ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே உள்ளன. அவற்றை நோக்கிய பயணிப்பினை உயர் ஆளுகை கொண்ட ஆய்வாளர்கள் மேற் கொள்ள வேண்டும். ஆய்வுக்கான களத்தை உயர் கல்வித் தளங்கள் திறந்து விடுதல் அவசியம்.


உசாத்துணைகள் :

1. வெளிச்சம் பவள இதழ் : கார்த்திகை- மார்கழி 2001: விடுதலைப் புலிகள், கலை,பண்பாட்டுக்கழகம்
2. நாற்று 1-30 இதழ்கள் தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்: புதுக்குடியிருப்பு
3. வழிகாட்டி: இதழ் 22: தை-மாசி 2005 : தூயவன் அரசறிவியல் கல்லூரி, கிளிநொச்சி
4. நேர்காணல், நெடுந்தீவு மகேஸ் 01.10.2012 காலை 1100 முதல் 1200 மணிவரை
5. சண் தவராஜா, தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் ஊடகர்களின் பங்கு முகநூல் : சண்முகம் தவராஜா


* * * * * * * * *

# அகால மரணங்கள்

வெள்ளென வெல்லாம்
வெறிச்சோடிக் கிடந்து
வெறுஞ் சாம்பல் மேடாய்த்தான்
தரிசனம் தந்தது.
மதியம் திரும்பியதும்
கட்டை அடுக்கிவிட்டுக்
காத்துக் கிடக்கின்றார்.
நீறு பூத்த குறங் கொள்ளிக் கட்டைகள்
காற்று ஊத கண் முழித்துப் பார்க்குது!
இப்ப வெல்லாம்
அகால மரணந்தானே அதிகம்.
ஒருவேளை
கைகூடாத் திருமணத்தால்
காதலர் தற்கொலையோ
சாதி மத பேதம் தடுத்த
கொடுமையிதோ!
அதோ பார்!
துண்டுப் பிரசுரம் தெருவெல்லாம் ஒட்டி
தண்டிகை காவிச் சனம் திரண்டு வருகுது
“குண்டு துளைத்துக்
குருதி குளிப்பாடிச்
சவமாகச் சாய்ந்தாலும்
சாகாமல் வாழுகிறாய்
விடுதலை வேள்வியிலே
உடல் தீக்கு ஈந்துவிட்டாய்...”
ஒரு கோடி சிந்தனைகள்
உள்ளத்தில் அலைமோத
மீதியைநான் படிக்கவில்லை.
இப்பவெல்லாம்
அகால மரணந்தானே அதிகம்.

**–தா.இராமலிங்கம்**

# கெடுவதற்கு இவ்வளவு விஷயங்களா?

01) பார்க்காத பயிரும் கெடும்.
02) பாசத்தினால் பிள்ளை கெடும்.
03) கேளாத கடனும் கெடும்.
04) கேட்கும்போது உறவு கெடும்.
05) தேடாத செல்வம் கெடும்.
06) தெகிட்டினால் விருந்து கெடும்.
07) ஓதாத கல்வி கெடும்.
08) ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்.
09) சேராத உறவும் கெடும்.
10) சிற்றின்பன் பெயரும் கெடும்,.
11) நாடாத நட்பும் கெடும்.
12) நயமில்லா சொல்லும் கெடும்.
13) கண்டிக்காத பிள்ளை கெடும்.
14) கடன்பட்டால் வாழ்வு கெடும்.
15) பிரிவால் இன்பம் கெடும்,.
16) பணத்தால் அமைதி கெடும்.
17) சினமிகுந்தால் அறமும் கெடும்.
18) சிந்திக்காத செயலும் கெடும்.
19) சோம்பினால் வளர்ச்சி கெடும்.
20) சுயமில்லா வேலை கெடும்.
21) மோகித்தால் முறைமை கெடும்.
22) முறையற்ற உறவும் கெடும்.
23) அச்சத்தால் வீரம் கெடும்.
24) அறியாமையால் முடிவு கெடும்.
25) உழுவாத நிலமும் கெடும்.
26)உழைக்காத உடலும் கெடும்.
27) இறைக்காத கிணறும் கெடும்.
28) இயற்கையை அழிக்கும் நாடும் கெடும்.
29) இல்லாலில்லா வம்சம் கெடும்.
30) இரக்கமில்லா மனிதம் கெடும்.
31) தோகையினால் துறவு கெடும்.
32) துணையில்லா வாழ்வு கெடும்.
33) ஓய்வில்லா முதுமை கெடும்.
34) ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்.
35) அளவில்லா ஆசை கெடும்.
36) அச்சப்படும் கோழை கெடும்.
37) இலக்கில்லா பயணம் கெடும்.
38) இச்சையினால் உள்ளம் கெடும்.
39) உண்மையில்லா காதல் கெடும்.
40) உணர்வில்லாத இனமும் கெடும்.
41) செல்வம் போனால் சிறப்பு கெடும்.
42) சொல்பிறழ்ந்தால் பெயரும் கெடும்.
43) தூண்டாத திரியும் கெடும்.
44) தூற்றிப்பேசும் உரையும் கெடும்.
45) காய்க்காத மரமும் கெடும்.
46) காடழிந்தால் மழையும் கெடும்.
47) குறி பிறழ்ந்தால் வேட்டை கெடும்.
48) குற்றம் பார்த்தால் சுற்றம் கெடும்.
49) வசிக்காத வீடும் கெடும்.
50) வறுமை வந்தால் எல்லாம் கெடும்,.
51) குளிக்காத மேனி கெடும்.
52) குளிர்ந்து போனால் உணவு கெடும்.
53) பொய்யான அழகும் கெடும்.
54) பொய்யுரைத்தால் புகழும் கெடும்.
55) துடிப்பில்லா இளமை கெடும்,.
56) துவண்டிட்டால் வெற்றி கெடும்.
57) தூங்காத இரவு கெடும்.
58) தூங்கினால் பகலும் கெடும்.
59) கவனமில்லா செயலும் கெடும்.
60) கருத்தில்லா எழுத்தும் கெடும்,.

இவ்வளவும் ஔவையார் சொன்னது.
இவற்றை அறிந்து அதன்படி நடந்துகொண்டால்
நமது வாழ்க்கை கெடவே கெடாது.

## க என்ற எழுத்தை மட்டுமே கொண்ட காளமேகப் புலவரின் பாடல்:

" காக்கைக் கா கா கூ கை கூகைக்கா
காகக் கை
கோக்குக் கூ காக்கைக் குக் காக்கைக் குக்
கைக்கைக் கா கா "

இதன் பொருள்:
காக்கையானது பகலில் கூகையை ( ஆந்தை) வெல்லும். கூகை இரவில் காக்கையை வெல்ல முடியும். கோ என்னும் அரசன் பகைவரிடம் இருந்து தன் நாட்டை இரவில் ஆந்தையைப் போலவும், பகலில் காக்கையைப் போலவும் காக்க வேண்டும்.
எதிரியின் பலவீனம் அறிந்து கொக்கு காத்திருப்பது போல தக்க நேரம் வரும்போது காத்திருந்து தாக்க வேண்டும். தகுதியற்ற காலம் எனில், தகுதியான அரசனுக்கு கூட கையாலாகி விடாமல் போகக் கூடும்.

# விடுதலைப்புலிகளின் 110 முதன்மை உறுப்பினர்கள் எங்கே?

## பிரான்ஸிஸ் ஹறிசன் டுவிட்டரில் வெளியிட்ட முக்கிய போர்க் குற்ற ஆதாரம்

விடுதலைப்புலிகளின் 110 முதன்மை உறுப்பினர்கள் எங்கே?

புலிகளின் மூத்த போராளி பாலகுமாரனும் மகனும் மற்றும் ஒருவரும் இராணுவத்தின் பிடியில் இருப்பதைப் போன்ற ஒரு புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது.

இப் புகைப் படத்தினை பிரான்ஸ்சிஸ் ஹறிசன் தனது டுவிட்டர் தளத்தில் பதிவேற்றியுள்ளார்.

சிறீலங்கா படையினரிடம் கையளிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் முதன்மை உறுப்பினர்கள் எங்கே?

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட கடந்த 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி நூற்றுக்கணக்கான விடுதலைப்புலிகள் அமைப்பின் முதன்மை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் படையினரிடம் உறவினர்களால் கையளிக்கப்பட்டனர். இவ்வாறு கையளிக்கப்பட்டவர்களில் 110 பேருடைய விபரங்கள் தொகுக்கப்பட்டு தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

படையினரிடம் கையளிக்கப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பிலான ஆய்வுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் யஸ்மின் சுக்கா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதி செயற்திட்டம் - சிறீலங்கா (International Truth and Justice Project – Sri Lanka (ITJP)) என்ற அமைப்பு இந்த விபரங்களை வெளியிட்டுள்ளது.

இலங்கைத்தீவில் இடம்பெற்ற போரின் போது போர்க் குற்றங்களும், மனித குலத்திற்கு எதிரான கொடூரங்களும் இடம்பெற்றதாகவும், அது தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திய ஐ.நா செயலாளர் நாயகம் பான்கீ மூனினால் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய நிபணர் குழுவின் உறுப்பினராக இருந்தவரே யஸ்மின் சுக்கா ஆவார்.

அவரது தலைமையிலான இந்தக் குழு வெளியிட்டுள்ள இந்த பெயர் பட்டியல் அடங்கிய அறிக்கை, கண்ணால் கண்ட சாட்சியங்கள் மற்றும் சரணடைந்த சந்தர்ப்பத்தில் பதிவுசெய்யப்பட்ட பெயர் விபரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்ட 110 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு:

01 ஆதவா ( செயற்பாடு தெரியாது)

02 அகிலன் மாஸ்டர் (புலனாய்வுப் பிரிவு),

03 அம்பி ( செயற்பாடு தெரியாது)

04 அராமுதன் ( இம்ரான் பாண்டியன் படை அணியின் பிரதித் தளபதி),

05 ஆர்யன் ( செயற்பாடு தெரியாது)

06 பேபி சுப்பிரமணியம் (இளங்குமரன் ) ( கல்வித் துறை பொறுப்பாளர்),









07 பாலச்சந்திரன் பிரபாகரன் (பிரபாகரனின் இளைய மகன்)

08 ஏ.பாலகுமாரன் ( மூத்த உறுப்பினர் )

09 Lt.Col.அருண்நம்பி ( இம்ரான் பாண்டியன் படை அணியின் தளபதி)

10 பாலகுமாரின் மகன் தீபன் ( சூரியதீபன் )

11 பாலதாஸ் ( சிரேஷ்ட உறுப்பினர், நிதித் துறை )

12 பாரி (வெளியக கணக்காய்வு பொறுப்பாளர்)


13 பாபு ( நகை விற்பனை பொறுப்பாளர், மனைவியுடன் சரணடைந்ததாக சொல்லப்படுகிறது),

14 பாபு - இளம்பரிதி (சேரன் வாணிப பொறுப்பாளர் )

15 பவன் கமில்டன் (கடாபியுடன் இருந்தவர், ஆனால் அங்கவீனமானவர்களை பராமரித்தவர்)

16 பாஸ்கரன் ( மணலாறு தலைமையக பொறுப்பாளர்)

17 பாஸ்கரன் ( சொர்ணத்துடன் பனியாற்றியவர், கிளிநொச்சியில் பிறந்தவர் )



18 Lt.Col.சந்திரன் ( இராணுவ புலனாய்வு)

19 எழிலன் (திருகோணமலை அரசியல் பொறுப்பாளர் )

20 எழில்வாணன் மாஸ்ரர் ( பாடசாலை ஆசிரியர் )

21 வண பிதா.பிரான்சிஸ் ஜோசப் (கத்தோலிக்க பாதிரியார்)

22 கோபி அக்கா (வீரபாண்டியன்) ( ஒரு கையை இழந்தவர், சொத்து மேற்பார்வை)

23 கரிகரன் ( செயற்பாடு தெரியாது)

24 இளம்திரையன் (மார்ஷல்) ( இராணுவ பேச்சாளர் )

25 இளம்பரிதி ( சின்னத்தம்பி மகாலிங்கம்) ( யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர்)

26 மகாலிங்கம் சிவாஜினி ( இளம்பரிதியின் மனைவி )

27 மகாலிங்கம் மகிழினி - இளம்பரிதி (10 வயது)

28 மகாலிங்கம் தமிழொளி - இளம்பரிதி (8 வயது)

29 மகாலிங்கம் எழிலினி - இளம்பரிதி (3 வயது)

30 இளம்குமரன் (மணலாறு, கட்டளை அதிகாரி )

31 இளவேங்கை மாஸ்டர் ( செயற்பாடு தெரியாது)

32 இன்தமிழ் ( செயற்பாடு தெரியாது)

33 இரும்பொறை மாஸ்டர் ( சினைப்பர் அணி பொறுப்பாளர்)

34 இசைப்பிரியா ( ஊடக பிரிவு)

35 ஜவான் ( புலிகளின் குரல் வானொலி)

36 ஜெயராஜ் ( நிதிப் பிரிவு )

37 காந்தி ( புலனாய்வு பிரிவு, சிறைப் பொறுப்பாளர்)





38 கண்ணன் (அரசியல் பிரிவு, மாணவர் அமைப்பு பொறுப்பாளர்)

39 கங்கன் - கனகன் ( லோகநாதன் அருணாசலம் ) (அரசியல் பிரிவு, பாதுகாப்பு)

40 கரிகாலன் ( முன்னாள் கிழக்கு மாகாண அரசியல் துறை பொறுப்பாளர்)

41 கருவண்ணன் ( மாவீரர் பணிமனை வாகன பொறுப்பாளர் )

42 கினி ( யோகியின் உதவியாளர், முரண்பாட்டு ஆய்வு நிறுவன பிரதிப் பொறுப்பாளர்)

43 கிருபா மாஸ்டர் ( செயற்பாடு தெரியாது)

44 குயிலன் ( இராணுவ புலனாய்வு)

45 குமரன் ( பால்ராஜின் மைத்துனர்)

46 குணம் ( சிரேஷ்ட படைத் தளபதி , திருகோணமலையின் முன்னாள் தளபதி?)

47 குட்டி (பாண்டியன் வாணிப பொறுப்பாளர்)

48 லோரன்ஸ் ( வவுனியா மாவட்ட கட்டளை அதிகாரி )





49 மாதவன் ( காவல் துறை பிரதி பொறுப்பாளர் )

50 மஜீத் ( இராணுவ புலனாய்வு- நிர்வாக அதிகாரி )

51 மலரவன் (நிர்வாக சேவை )

52 மனோஜ் ( ஏற்பாடுகள் - ரூபனின் பிரதி)

53 மணியரசன் ( சிரேஷ்ட இராணுவ தளபதி)

54 மாது ( திருகோணமலை இராணுவ பிரிவு )

55 மிரேஷ் ( நிதர்சனம் தொலைக்காட்சி )

56 மோகன் அங்கிள் (கடற்புலிகள் )

57 முகிலன் (இராணுவ புலனாய்வு)

58 முகுந்தன் - ஐந்து ஒன்பது ( வட போர் முனையில் தீபனின் பிரதி )

59 நடேசன் (அரசியல் துறைப் பொறுப்பாளர்)

60 நாகேஷ் ( நிர்வாக பிரிவு பொறுப்பாளர் )

61 நளாயினி ( பொறுப்பாளர், ஆங்கில கல்லூரி )

62 நளாயினி - நளாகினி (மாலதி படைப்பிரிவு )

63 நேயன் (புலனாய்வு)

64 நீதன் ( தலைமையக பொறுப்பாளர், சொந்த இடம் திருகோணமலை )

65 நிலவழகி (மருத்துவ பிரிவு மருத்துவர், இரு குழந்தைகளின் தாய் )

66 நிஷாந்தன் (கடாபியுடன் இருந்தவர், பின்னர் அங்கவீனமானவர்களை பராமரித்தார்)

67 நிஷாந்தன் மாஸ்டர் (இராணுவ விநியோகம் )

68 பஞ்சன் புலனாய்வு (மகாதேவன் ஞானகரன்) (முக்கியஸ்தர்களில் ஒருவர் )

69 பரா- ராதா ( நீதித் துறை பொறுப்பாளர்)

70 Dr.பத்மலோஜானி (கரிகாலனின் மனைவி, மருத்துவ பிரிவு)
71 Lt.Col.பிரபா (புலனாய்வு பிரிவு)
72 பூவண்ணன் (நிர்வாக பிரிவு பொறுப்பு)
73 பூவண்ணன் மாஸ்டர் ( செயற்பாடு தெரியாது)
74 பிரியன் (சுவாமிநாதர் தயாசிறி) ( நிர்வாகத்துறை பிரதி)
75 புலித்தேவன் (சமாதான செயலகம்)
76 புலிமைந்தன் (யோகியின் சாரதி)
77 புரச்சிகா (அம்பியுடன் கூட இருந்தவர், மேலே பார்க்க )
78 புரட்சி மாஸ்டர் (ஆர். பி.ஜி சினைப்பர் பிரிவு)
79 ரூபன் ( ஏற்பாடுகள் பொறுப்பாளர்)
80 ராகுலன் (யாழ்ப்பாண படைப்பிரிவு பிரதி )
81 ராஜா ( விளையாட்டு துறை, பாப்பாவின் பிரதி, 4 பிள்ளைகளுடன் காணவில்லை)
82 புதுவை இரத்தினதுரை ( கவிஞர், கலை மற்றும் கலாசார பொறுப்பாளர்)
83 Col.ரமேஸ் (இளங்கோ) ( காவல் துறை)
84 Col.ரமேஸ்(சிரேஷ்ட இராணுவ தளபதி)
85 ரேகா மகேந்திரராஜா ( மருத்துவ பிரிவு பொறுப்பாளர்)
86 ரஜித்தன் (மணலாறு மாவட்டம் )
87 ரூபன் ( யாழ்ப்பாண படைப்பிரிவு 3 ஆவது பொறுப்பாளர்)
88 S.தங்கன் (சுதா ) சோமசுந்தரம் சுதாகரன் (அரசியல் துறை பிரதி)
89 சக்தி (வனப் பிரிவு ஒருங்கிணைப்பாளர்)
90 சத்யன் ( வளப் பாதுகாப்பாளர்)
91 செல்வராசா (யாழ் மாவட்ட தளபதி )
92 சிலம்பன் (ராதா விமான எதிர்ப்பு பொறுப்பாளர்)









93 சின்னவன் (புலனாய்வு)
94 சித்திரங்கன் (மணலாறு மாவட்டத்துக்கான தளபதி)
95 Lt.Col.சுடரவன் (இராணுவ புலனாய்வு)
96 Lt.Col.தணிகையரசு (இம்ரான் பாண்டியன் படைப் பிரிவு)
97 திலக் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செயலக பொறுப்பாளர்)
98 திலகர் (நிதிப் பிரிவு, விவசாயம், பண்ணை களை கவனித்து வந்தார் )
99 துவாரகன் வயிரவமூர்த்தி (மாவீரர் துயிலும் இல்லம் மன்னார்)
100 வாகீசன் (ராமநாதன் நிமலநாதன்) ( செயற்பாடு தெரியாது)
101 வீரதேவன் (மகாலிங்கம் ஜெயகாந்தன்) (வங்கிகள் பொறுப்பாளர்)
102 Lt.Col.வைத்தி (இராணுவ புலனாய்வு)
103 Lt.Col.வள்ளுவன் மாஸ்டர் (ராதா விமான எதிர்ப்பு பிரிவு)
104 வேலவன் (சிரேஷ்ட தளபதி, இம்ரான் பாண்டி யன் படை அணி)
105 வேல்மாறன் (கேணல் பிரபாவின் பாதுகாப்பாளர்)
106 வினிதா (நடேசனின் மனைவி )
107 வீமன் (கட்டளை தளபதி)
108 விபுலேந்திரன் (நிதிப் பிரிவு)
109 யோகன் - சேமணன் (அரசியல் துறை)
110 யோகி (முரண்பாட்டு ஆய்வு நிறுவன பொறுப்பாளர்)

# ஈழத்துக் கவிஞர்களின் நவீன கவிதைகளில் போரும் போரியல் வாழ்வும்

- அந்துவன் கீரன் -

"எந்த மகனுக்காய் என் கால்களை நகர்த்த" என்னும் கவிதையில் காணலாம்.

" அவனை விதைத்த
அடுத்த கணம்
அதோ அடுத்தடுத்துள்ள
கல்லறைகளை நோக்கி
ஓடின கால்கள்.
கண்ணீர் பூக்களைத்
தூவின கைகள்.
எந்த மகனுக்காய்
என் கால்களை நகர்த்த?
நேற்று விதையுண்டு போன
மூத்தவனுக்கா?-இல்லை
இப்போதுதான்
விதைக்கப்பட்ட என்
இளைய குஞ்சுக்கா?"

இழப்புக்களைத் தாங்கித் தாங்கி நிமிர்கிறது நம் தேசம். இன்று உள்ளவன் நாளையில்லை. மண்ணுக்காக மரணித்தவன் மாண்ட பின்னரும் வாழ்கிறான். துயரத்தை நெஞ்சில் ஏந்தி கண்ணீரை விழியில் சேர்த்து தொடர்கிறது சண்முகநாதன் கலைமகளின் பயணம்.

"நேற்றுவரை
கண்ணெதிரே நின்று
கதை பேசிச் சிரித்த முகம் இன்று
காவியமாய்ப் போனது.
நிஜமும் நிழலாகிப் போக
நீங்க முடியாத
நினைவுகளால்
நிறைக்கப்பட்ட
இதயத்தின்
விழி வழியே
நினைவின் துளிகள்
......இன்னமும் இரண்டு
மணித்துளிதான்.
நேற்றைய உன்னைப்போல்
இன்று உன்னருகில்
நான்.
கந்தகச் சுமையை
கட்டியணைத்தபடி
உன் தடம் பட்ட
மண்ணெடுத்து
முத்தமிட்டு
இலக்கு நோக்கி
தொடர்கிறது
என் பயணமும்"

உடலில் வெடி குண்டினைக் கட்டிச் செல்லும் உன்னத ஆத்மாவின் பதிவும் பார்வையுமாக வெளிப்படும் இக்கவிதை தமிழ் இலக்கிய உலகுக்குப் புதியது. படிப்போர் மனங்களில் கண்ணீரைச் சொரியச் செய்யும் இக்கவிதைகள் நெய்யப்பட்டவையல்ல. இதயத்திலிருந்து வார்க்கப்பட்டவை.

தற்கொடைப் போராளிகளுக்கு கல்லறைகள் கிடையாது. அவர்களின் சடலங்கள் உரிமை கோரப்படுவதில்லை. சுவடு தெரியாமல் அவர் இருப்பு மறைக்கப்படும். இவ்வாறு தற்கொடைப் போராளியாய்ப்போய் உடல் சிதறி வெடியுண்டு சிதைந்து கிடக்கும் தோழியைப் பாடும் பெயரிடப்படாத நட்சத்திரங்கள் என்னும் கவிதை உள்ளத்தை உடைய வைக்கிறது.

"அன்பான தோழி
நீயும் இல்லை
உனக்கு கல்லறையும் இல்லை
கண்ணீர் விட்டு
அழமுடிந்தும்
பெயர் சொல்லி அழ முடியவில்லை.
தோழி! உன் சாதனை உன்னதம். .....
பெயரிடாத நட்சத்திரமே!
பல்லாயிரம் நட்சத்திரங்களில்
உன்
பிரகாசம் மட்டும்
என் கண்ணைப் பறித்துக் கதை
சொல்லுகின்றது...."

பெண்ணுடல், பெண்மொழி என்னும் கருத்துருவங்கள் வலுவடைந்த நிலையில் நுட்பமான வார்த்தைப் படிமங்களுக்கூடான அனுபவ உலகமாக விரியும். - பஹீமா ஜஹானின் கவிதைகள் முஸ்லீம் தமிழ் இனத்துவத்தின் உறவுப்பாலமாகும். இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் இருந்து விலகி தமிழ்த் தேசியத்தின் ஆதரவுக் குரலாய் விளங்கும் - பஹீமா ஜஹானின் கவிதைகள் போரின்வலி, அடக்குமுறைக்கு எதிரான தார்மீகக் கோபம், இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு, மனிதமனங்களுக்கு இடையிலான உறவு முதலானவற்றைப் பேசுகின்றன. சிறந்த குறியீட்டு உத்திகளைக் கையாண்டு தமிழ்க்கவிதைகளை நவீன தளத்துக்கு இட்டுச் சென்ற கவிதா ஆளுமைகளுள் ஒருவரான - பஹீமா ஜகான் தமிழருக்கெதிரான ஒடுக்குமுறைகளையும் அவர்களின் வாழ்வியல் அவலங்களையும் பாடியவர். விடுதலைப் போராட்டத்தின் தீவிரப் போக்குகள் தமிழ் முஸ்லிம்களிடையே விரிசலை ஏற்படுத்திய காலப் பகுதியில் தமிழ் மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர். விடுதலைப் போரில் தன்னுயிர் ஈந்த போராளியைப் பாடும் ஒரு கடல் நீரூற்றி என்னும் கவிதை ஈழத்தின் நிகழ் காலப்பதிவுகளில் ஒன்றாகும்.

"அலையெழுப்பும் கடல் பரப்பினில்
உனக்கான பணி முடிக்கவென
விடை பெற்றுப்போனாய்
வாழ்த்தச் சொல்ல வாயெழவுமில்லை
ஆரத்தழுவிட
நீ
விரும்பவுமில்லை
வெளியே பெய்த மழை
என் கன்னங்களில் - வழிந்தோட
மழைப்புகாரினூடே மறைந்து போனாய்
திரைகடல் சென்ற திரவியமானாய்
ஆழிப்பரப்பெங்கும் ஊழித்தீ எழுந்து தணிந்தது...
நீ
திரும்பி வரவே இல்லை
இன்று வீரர்கள் துயிலும் சமாதிகள் மீது
காலத்துயரின் பெருமௌனம்
கவிழ்ந்துள்ளது
சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவளே !
இங்கு ஏதுமற்ற உன்கல்லறையில்
ஒரு கடல் நீரூற்றி நிரம்பிடவோ"

வீரம் நிலத்தை ஆக்கிரமித்தது. நிலத்தை வென்றது. உயிர்களைப் பலி குடித்து உடல்களைச் சிதைத்த போதும் வீரம் பேசப்படும். அன்று தொடக்கம் இன்றுவரை அது வரலாற்று உன்னதமாகச் சித்திரிக்கப்படும். இவ்வகையில் ஆனையிறவு வெற்றி மகத்தான வெற்றியாக கருதப்பட்டு "ஆனையிறவு" என்னும் கவிதைத் தொகுப்பை ஈழத்துக்கு அளித்தது. வீரத்தின் வலிகளைத் தாங்கி உப்புக்காற்றுத் தழுவிய சாலையில் "ஆனையிறவு" எழுந்து நிற்பதை அலையிசையின் "ஆக்கிரமிப்புச் சின்னங்களைத் தாங்கிய பூமி உலகறியக் கூவும் பிரச்சார விளைநிலம் வெறித்தனத்தின் உச்சம் சிதற விழித்திருந்தது."

(ஆனையிறவு, பக் 41) என்னும் எழுச்சிமிக்க வரிகள் காட்சிப் படிமங்களுக்கூடாக உயிரோட்டம் பெறுகின்றன. யுத்தம் ஏற்படுத்தும் உணர்வும் வலியும் கொடுமையானவை. வன்மம் கொள்ளும் இக் கொடியயுத்தம் தவிர்க்கப் படவேண்டும். ஒடுக்கு

முறையையும் போரியலையும் தாண்டிப் புதிய வெளிகள் திறக்கப்படுவதுடன் போரற்ற நிம்மதியான வாழ்வை அவாவிநிற்கும் கவிதைகளை இக்காலத்துக் கவிஞர்கள் கோரி நின்றனர். பிற்காலத்தில் எழுந்த ஈழத்துப் பெண்ணியக் கவிதைகள் பல, போரின் மீதான கடும் விசனத்தைப் பாடின.

"யுத்தம் எனக்குப் பிடிக்கவில்லை
குண்டுமழைக் குளிப்பில்
குருதியுறைந்த வீதிகளில்
நிணவாடை கலந்த சுவாசிப்புக்களில்
வெறுப்படைகின்றேன்.....
மனிதர்களின் கோரச் சாவு கண்டு என்
மனம் குமுறுகின்றது
துப்பாக்கி முழக்கத்திடையே
விழித்துக்
கொள்ளும் ஒவ்வொரு காலையையும்
என்னால் ரசிக்க முடியவில்லை
வசந்தம் கருகிப்போன வருடங்களாய்
விரிந்துள்ளது எம் வாழ்வு...."

'நான் எப்போதும் மரணிக்கவில்லை' என்னும் அம்புலியின் இக்கவிதை வசந்தத்தைக் கருகச் செய்த யுத்தத்தை எள்ளி நகையாடுகிறது.

பெண்ணியத்தின் தீவிரப்போக்கைக் கருத்தாடல்களுக்கு ஊடாக உள்வாங்கிய பெண் கவிஞைகள், போர் ஏற்படுத்திய வலி, உணர்ச்சி, அதன் தாக்கம் ஆகியவற்றை ஆழமான மொழிச் சொல்லாடல் படிமக்குறியீட்டுக் கருத்துருவாக்கங்களின் வழி அனுபவங்களை, நவீன கவிதைகளாக உருவாக்கினர். இக்காலப்பகுதியில் இலக்கிய மீட்டுருவாக்கத்தின் மூலம் பெண்ணிற்கான ஒரு புதிய வெளியை ஈழத்தின் போரியல் கவிதை திறந்தது. இங்கு பெண் மொழி என்பது ஒடுக்கப்பட்ட பெண்ணுடலுக்குள் சூழல் மாற்றம் கிளர்த்தும் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு, ஆகியன உள்ளிட்ட அகநிகழ்வுகள் சார்ந்து உருவாகின்றது. பொதுவாக தான் சார்ந்த சூழலோடு முனைப்பு பெறும் இப்பெண் மொழியானது பிரத்தியேக மனப் படிமங்களுக்கூடாகப் பால்சார்ந்த தனித்த அடையாளங்களை வெளிப்படுத்தி நிற்கிறது. ஈழத்தின் பெயரிடப்படாத நட்சத்திரங்களின் வாழ்வியல் சுவடாக ஒளிர்ந்து, தனித்துவமான உணர்வுகளை உருக்கமாகவும் உயிரோட்டமாகவும் பதிவு செய்யும் இக்கவிதைகள் சமுதாய வாழ்வு பற்றிய தெரிநிலை விழிப்பினை ஊட்டி நிற்பவை. நிலை பிரமாணமாய் எழுந்து என்றும் எப்போதும் அழியாது நிலைத்து நிற்பவை.

## திரும்ப முடியாத நகரம்

-தீபச்செல்வன்

என் நகரத்தின் கடைசித் தருணம்
அதுவென நினைத்திருக்கவில்லை.
உன்னை முத்தமிடுகிறபோது
அது கடைசி முத்தமெனவும்
நினைத்திருக்கவில்லை.
போருக்கான வார்த்தைகள்
எழுதப்பட்ட நகரத்தில் உன்னை
தனியே விட்டு வந்தேன்.

எப்படி பிரிந்து போயிற்று என் தெரு?
இழப்பின் கொடுமையை
நீதான் முழுமையாகச் சுமந்திருப்பாய்.
நான் உன்னை இழந்து
தனிப் பறவையாய் வீசப்பட்டேன்.

நமக்கு மேலால் நின்ற நாவல் மரம்
முறிந்து போனதை
நீ எனக்குச் சொல்லாமலே விட்டிருந்தாய்.
நிழலற்றுத் திரிகிறதை
நான் காணமுடியவில்லை.
நாம் நாவல் மரத்தை இழந்திருக்க
அது வெளவால்களை இழந்துபோயிற்று.

விமானங்கள் வீடுகளைக்
கவ்விக்கொண்டு போகிறதாக
நான் கனவு கண்டெழும்புகையில்
நீ நமது நகரத்தில் இருந்து
துரத்தப்பட்டாய்.
காலையென்பது இழப்புடன்
தொடர்ந்து விடிகிறது.

எனது பேருந்து திரும்பவில்லை.
காத்திருப்பில் நீ அலைகிற துயர்மிகு
தெருக்களில் நான் திரும்பவில்லை.
போர் உன்னை
என்னிடமிருந்து பிரித்துவிட்டது
யாரிடம் நான் சொல்ல.

உன்னை ஷெல் தின்றுவிட்டது.
ஆயுதங்கள் மேலும் குவிக்கப்படுகையில்

போர் தொடரப்படுகிறபோது
வரைபடங்கள் மேலும்
அவதானிக்கப்படுகிறபோது
நம்மைக் குறித்து என்ன இருக்கிறது?

உன்னிடமும்
நமது காதல் நகரத்திடமும்
நான் திரும்பப்போவதில்லை.
திரும்பாத நகரத்தை
நாம் இழந்துவிட
நகரம் நம்மை இழந்திருக்கிறது.
நகரமிட்ட முத்தம்
இன்னும் காயாமலிருக்கிறது.

* * * * * * *

## ஒரு மயானமும் காவல் தேவதைகளும்

-பஹீமா ஜஹான்

சுழலுமிச் சோகச் சூழலிடை
உனக்கென எதையெழுத?
ஆடிப் பாடிப் பின் அவலம் சுமந்து நீங்கிய
சோலை வனத்தைத் தீயின்
நாவுகள் தின்று தீர்த்தன
நெற்கதிர்கள் நிரம்பிச் சலசலத்த
வயல் வெளிகளை
இரும்புச் சக்கரங்கள் ஊடுருவித் தகர்த்தன
எஞ்சிய எமது பள்ளிவாயில்களும்
அசுத்தமாக்கப்பட்டன

மண்ணை மீட்டெடுக்கும்
போராட்டத்தில் மனிதர்கள் வீழ்ந்தழிந்திட
பேய்கள் உலவிடும் பூமி மாத்திர்
தரிசு தட்டிக் கிடக்கிறது
இரத்தம் உறிஞ்சிய மண்ணில்
எத்தகைய வசந்தம் துளிர்த்திடுமினி?

யாருமற்ற பாழடைந்த நகரத்தின்
இடிபாடுகளினூடு
சூரியன் தயங்கித் தயங்கித் தலை நீட்டும்
போர் தின்ற பூமியில் வீழ்ந்திடும் கிரணங்கள்
ஒருதலைமுறையின் தலை விதியை
ஊமையாய்ப் படிக்கும்
அந்திப் பொழுதில் பயமும் பீதியும்
தொண்டைக் குழியை
நெரித்திடப்
பூதங்களின் காலடியோசை கேட்டுச்
சூரியன் நடுநடுங்கி மறையும்
தளைகளை வெட்டியெறிந்திடப்
புறப்பட்ட விடுதலைப்
பிரவாகம் எமை வீடு துறக்க வைத்தது
நீ வாழ்ந்த தேசம் இன்றுனை
எந்தப் பாடலைக் கொண்டும் வரவேற்கும்
நிலையிலில்லை!

நானும் நீயுமன்றி
இந்தப் பரம்பரையே தோள்களில்
சுமையழுந்திடத்
திசைக்கொவ்வொன்றாய்ச்
சிதறுண்டு போனது
கல்வியும் உழைப்பும்
கனவுகளை மெய்ப்பித்திட
ஆனந்தம் பூரித்த நாட்கள் இனியில்லை
பாழடைந்த படகுத் துறைகள்...
காடடர்ந்த பயிர் நிலங்கள்...
தலைகருகிய கற்பக தருக்கள்...
தரைமட்டமாகிப் போன
எங்கள் குடிமனைகள்...
எல்லாம்
பேய்கள் சன்னதம் கொண்டாடிய
கதையினைச்
சொல்லும்

அவசரப்பட்டு நீ
ஊரைக் காணும் ஆவலிலிங்கு
சோலை நிலத்தினூடு
அணிவகுத்துச் செல்லும் காவல் தேவதைகள்
அமைதியைப் பேணுகின்றன
அந்த ஏகாந்தம் குடியிருக்கும்
மயானத்தைக் காண
உனக்கென்ன ஆவல்
வந்து விடாதே

* * * * * * * * *

முற்றும்

சிறுகதை

# வீடு

- அஜந்தி -

கைபேசியில் மணி ஒலிக்க, படுத்திருந்தபடியே எடுத்தேன். அப்பாவின் குரல்..

“Good morning! ”

“Good morning அப்பா!”

“எழும்பிட்டியாடா?”

“முழிச்சிட்டன் இன்னும் கட்டிலை விட்டு எழும்பல்லை... இடமாற்றமோ அல்லது நேர வித்தியாசமோ தெரியல்ல... ரெண்டு நாள் சரியான நித்திரை இல்லை... ராத்திரி ஓரளவு பரவாயில்லை”

“சரி அப்பு ...இன்றைக்கு அந்த லோயரைப் போய்ப் பார்...எல்லா விவரமும் அவரிட்டை வடிவாகச் சொல்லி இருக்கிறேன்... போகேக்கை மறக்காம அந்த உறுதியையும் கையோடை கொண்டு போ....”

“சரியப்பா.”

“வீடு வாங்கிறவரும்... அங்கை வருவார்.....அவற்றை பேருக்கு.. மாத்தி எழுதி உறுதி முடிக்கிறது..... குடுக்கல்..... வாங்கல்.. எல்லாம் லோயர் பாத்துக் கொள்ளுவார். காசைக் கையில கொண்டு திரியாமல்...உடனேயே அங்கை உள்ள என்ரை எக்கவுண்டுக்கு டிபோசிற் பண்ணி விடு..”

“ஓமப்பா.”

“வேறை என்ன? உடம்பை பார்த்துக் கொள்... உங்கை எல்லாம் வசதியாக இருக்கா?”

“எல்லாம் ஓகே! ஆனா அம்மா போட்டுத்தாற காப்பி மட்டும் மிஸ்ஸிங்! ”

“சரி! சரி! அம்மாட்ட சொல்லுறன்...எல்லா அலுவலும் முடிஞ்ச உடனை... போன் ..பண்ணு.. bye!!”

”Bye’ ”

அம்மா அப்பாவுக்கு நான் ஒரே பிள்ளை. பிறந்து, வளர்ந்து, படித்து, பட்டம் பெற்றது, இன்று நல்லதொரு உத்தியோகம் பார்த்துக் கொண்டிருப்பது எல்லாமே லண்டனில் தான். நான் பிறப்பதற்கு முன்னமே அம்மா, அப்பா யாழ்ப்பாணத்தை விட்டு, புறப்பட்டு லண்டனுக்கு வந்து விட்டார்கள்.

என்னுடைய சின்ன வயசில், சிலதடவைகள் அவர்களுடன் யாழ்ப்பாணம் வந்து, இங்கே அப்பாவுக்கு சொந்தமான மானிப்பாய் வீட்டில் தங்கித் திரும்பியிருக்கிறோம். வீட்டைச் சுற்றி தென்னை, மா, பலா போன்ற மரங்கள். பின் பக்கம் பெரிய வளவு. அங்கே ஒரு நெல்லி மரமும் இருக்கிறது.

அந்த வீட்டை விற்பதற்குத்தான் இப்பொழுது என்னுடைய யாழ்ப்பாண வருகை. இலண்டனில் உள்ள வீடுகளைப் பார்த்துப் பழகிய எனக்கு, ஊரிலுள்ள இந்த வீடுகளைப் பார்க்கும் போது முற்றிலும் வித்தியாசமாகத் தெரியும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்வேன். இந்த வீட்டுக்கு வந்து தங்கியிருந்த நேரங்களில், என்னவென்று புரியாத, இலண்டனில் என்றுமே அனுபவித்திராத - சுகமான உணர்வொன்று மனசுக்குள் பரவி என்னை ஆனந்தப் படுத்தியிருக்கிறது. எந்தவித கட்டுப்பாடுமில்லாத சுதந்திரமொன்று எனக்குப் பரிசளிக்கப்பட்டது போன்றதொரு பரவசத்தில் நான் திளைத்ததும் உண்மை.

ஊரின் பெருமைகள் பற்றி அம்மாவும், அப்பாவும் பேசிக் கொள்வதன் காரணமும் இதுதானோ? இருக்கலாம்.

இடையில் அப்பா மட்டும் ஊருக்கு வந்து, தன்

பெயரில் இருந்த வீட்டை என் பெயருக்கு மாற்றி எழுதி வைத்தார்.

"உன்னைத் தவிர எங்களுக்கு வேறை ஆரடா? ஒரு நேரம் நீ விருப்பப்பட்டா, ஊரிலை போய் அந்த வீட்டில் இருக்கலாம் தானே?" என்று அடிக்கடி சொல்லியும் கொள்ளுவார். லண்டனிலையே பிறந்து, வளர்ந்ததாலையோ என்னவோ, என் மனசில்ல அப்படி ஒரு ஆர்வம் என்றைக்கும் ஏற்பட்டதில்லை.

தவிர, நான் வளர வளர அவ்வப்போது ஊரைப் பற்றி கேள்விப்படுகின்ற செய்திகள் திகிலூட்டும். அவற்றின் உச்சக்கட்டமாய், பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இறுதிக்கட்ட போர் என்று அங்கே நடத்தப்பட்ட இனவழிப்பு!!

நான் ஊரோடு போய் நிரந்தரமாக வசிப்பேன் என்று அப்பாவுக்கிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும், இதன் பிறகு முற்றாகவே இல்லாமல் போய் விட்டது. எனவே தான் மானிப்பாயில் இருக்கும் வீட்டை விற்பதற்கு முடிவெடுத்து, அதற்குரிய எல்லா ஒழுங்குகளும் செய்து, என்னை இப்போது யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

* * *

ஏற்கனவே குண்டு வீச்சுகளினால் ஓடுகள் உடைந்து, சுவர்களில் குண்டு பாய்ந்த துளைகளும், இடிந்த சுவர்களுமாயிருந்த மானிப்பாய் வீடு, கவனிப்பார் இல்லாமல் மோசமாகிக் கிடந்தது. ஒரு அறையும் குசினியும் சேதம் எதுவுமில்லாமல் தப்பிப் பிழைத்துக் கிடந்தன.

இந்த வீடு மட்டுமல்ல...

நான், கொழும்பிலிருந்து யாழ் நோக்கி ஒரு சொகுசு வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த



பகல் பொழுதில், வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் வரை பெரும்பாலான வீடுகள் இதே நிலையில்தான் இருப்பதைக் கண்டேன்.

...இடிந்தும்... சிதிலமடைந்தும்...கூரைகளே இல்லாமலும்...அப்படி உடைந்த வீடுகளிலும் சிலர் குடியிருப்பதையும் கண்டேன்.. அவர்கள் வேறென்ன தான் செய்ய முடியும்? எங்கே போவார்கள்?

அவர்கள் கூட பரவாயில்லை. போரினால் தங்கள் வீடுகளைப் பறி கொடுத்து இருக்க இடமில்லாமல் ஆதரவற்றுத் தவிக்கும் எத்தனையோ குடும்பங்கள் பற்றியும் செய்திகள் மூலம் அறிந்திருக்கிறேன்.

ஆதரவற்றோர் இல்லங்களில் தஞ்சமடைந்துள்ள, அப்படிப்பட்ட மக்களை நேரில் பார்த்து, அவர்களுடைய துன்பங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நீண்ட காலமாகவே எனக்குள் இருந்த ஒரு ஆதங்கத்தை நிறைவேற்றக் கூடிய ஒரு தருணமாகவும் இப்பொழுது நான் யாழ் வந்திருப்பதைக் கருதி, இன்று அந்த லோயரிடம் போவதற்கு முன் இங்கேயுள்ள அப்படிப்பட்ட இடங்களுக்கும் போய்வரத் தீர்மானித்தேன்.

* * *

நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை!!

ஒரு போரின் விளைவினால் இத்தனை அவலங்களா?

யுத்தக் கொடுமையின் நேரடி சாட்சிகளாய், துன்பக் கதைகளைச் சுமந்தபடி.. அத்தனை பேரும்.

அங்கவீனமாக்கப்பட்டு மனநலம் பாதிக்கப்பட்டு. பெற்றவர்களைப் பறி கொடுத்து.. பிள்ளைகளைத் தொலைத்து.. கணவனை இழந்து, மனைவியை இழந்து, மொத்தக் குடும்பத்தையும் குண்டு வீச்சுக்கு இரையாக்கித் தனியாளாக்கப்பட்டு., வீடு வாசல்களை எல்லாம் இழந்து இன்னும்.. இன்னும்.. பல உயிர்வதைகளுக்கு முகம் கொடுத்தவர்களாய்..

முப்பது வயசை அண்மித்துக் கொண்டிருக்கும் நான், கற்பனையில் கூட இதுவரை கண்டிராத ஒரு சூழலை நேரில் தரிசிக்க நேர்ந்த போது - அதிர்ந்து போய்விட்டேன்.

இது எனக்கு முற்றிலும் புதிய அனுபவம்.

இதயக் கூட்டுக்குள் ஒரு பாறாங்கல் வந்து உட்கார்ந்து கொண்டது போல உணர்ந்தேன்.

போர் - எந்த எல்லை வரைக்கும் ஒரு மக்கள் கூட்டத்தைக் கொண்டு போகுமா? கடவுளே!!

அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்பதைத் தாண்டி, முதன் முதலாய் என்னுள்ளே கேட்ட ஒரு குரல் என்னை உலுக்கியது!

'இவர்கள் தமிழ்மக்கள். இவர்களும் நானும் ஒரே இனம்.. இவர்கள் எல்லாம் என் தாய் நிலத்து உறவுகள்'.

தாயாய், தந்தையாய், தாத்தாவாய், பாட்டியாய், அண்ணனாய், தம்பியாய், அக்காவாய், தங்கையாய் .. இன்னும் எனக்கு நெருங்கிய உறவுகளாய் அங்கே எல்லோரும் எனக்குத் தெரிந்தார்கள்.

நெகிழ்ச்சி நிரம்பிய உணர்ச்சிக் கொந்தளிப்பில், என் மனம் அவர்களை அரவணைத்துக் கொண்டது.. அரைக் காற்சட்டை மட்டும் போட்டபடி, அம்மாவைக் கட்டிக்கொண்டு ஒரு சிறுவன். பத்து வயதிருக்கும்.

'தம்பி ஸ்கூலுக்கு போகேல்லையா.?'

'இல்லை!' என்று தலையாட்டினான்.

'தம்பி..! அந்தப் பெரிய சண்டை நடந்த நேரம் தான் இவன் பிறந்தவன். எங்கடை இடம் வன்னி. இப்ப வீடுமில்லை., வாசலுமில்லை. மாறி மாறி இப்படி முகாம்களிலை இருக்கிறம்.. ஆரோ புண்ணியவான்கள் எங்களுக்குச் சாப்பாடு தருகினம்.! இவனைப் பள்ளிக்கு எப்படி விடுறது...?' தாயின் பதில் இது.

ஒரு கணவன் மனைவி. கணவனுக்கு வலது பக்கம் முழங்காலுக்கு கீழே கால் இல்லை. குழி விழுந்த கண்களுடன் மெலிந்த தோற்றத்தில் மனைவி.

"இவர் துணைப்படையிலை இருந்தவர். 2009 ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஒரு சண்டையில கால் இல்லாமல் போச்சு. அந்த நேரம் ஆஸ்பத்திரியள் ஓரளவு இயங்கினதாலை, பிரச்சனை இல்லாமை காயம் ஆறிட்டுது... மே மாதத்துக்குப் பிறகு ரெண்டுபேரும் வவுனியா 'காம்ப்' பிலை இருந்து படாத பாடெல்லாம் பட்டம்.. பிறகு ஒருமாதிரி வெளியில வந்திட்டம். எங்கட வீடும் போய், பிழைப்பும் போய்.. அநாதரவா நிற்கிறம்..."

இதே போல வேறும் ஒன்றிரெண்டு பராமரிப்பு முகாம்களுக்குப் போய் - அங்கும் பல்வேறு துன்பக் கதைகளைக் கேட்டபின் திரும்பிக் கொண்டிருந்தோம். வண்டியின் ஓட்டுனரும் எல்லா இடமும் என் கூடவே வந்திருந்தார். நீண்ட நாளாகவே அப்பாவுக்கு மிகவும் தெரிந்த ஒருவர் அவர்.

மாலை நாலு மணியாகிக் கொண்டிருந்தது.

"லோயர் வீட்டுக்குத் தானே தம்பி?" ஓட்டுனர் கேட்டார்.

"இல்லையண்ணை. இப்ப வேண்டாம். பிறகு பார்ப்பம்.. இப்ப ஹோட்டலுக்கு போவம்!"

குளித்து, உடை மாற்றி, உணவு முடித்து அறையில் வந்து உட்கார்ந்தேன்.

பலவகை எண்ணங்களும் மாறி மாறி வந்து நினைவில் மோதிப் பிரிந்தன. விடுதலைப் போராட்டத்தின் அவசியம் பற்றி இது நாள் வரைக்கும் நான் எண்ணிப் பார்த்திராத எனக்குப் புரியாமல் இருந்த சில உண்மைகள் தெளிவாகின. சில தொடர்ந்தும் புதிராகவே இருந்தன. எது எவ்வாறாயினும், ஏதோ ஒரு முடிவை எடுப்பதற்கு - இன்னும் சொல்லப் போனால் ஏதோ ஒன்றைச் செய்வதற்கு - என் உள் மனம் என்னை உந்தித் தள்ளிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

மாலையில், ஹோட்டலுக்கு திரும்பிக் கொண்டிருக்கும் போது ஓட்டுனர் என்னிடம் சொன்ன ஒரு விடயத்தை இப்போது மனம் மீள் பதிவு செய்து பார்க்கிறது.

வசாவிளானில், சொந்த வீட்டில் குடியிருந்து, சொந்த நிலத்தில் பயிர் செய்து மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த ஒரு குடும்பம். வீடும் நிலமும் இராணுவத்தின் வசமாகிவிட, கடந்த சில வருடங்களாக மானிப்பாயில் தெரிந்தவர்களின் வீட்டில் ஒரு பகுதியில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களை இனியும் தங்கள் வீட்டில் இருக்க அனுமதிக்க முடியாதென்று, வேறிடத்துக்கு போகும்படி சொல்லி விட்டார்கள்.

இரண்டு பிள்ளைகள், தாய் தகப்பன், இன்னும் சில மாதங்களில் மூன்றாவது குழந்தையும், பிறக்க போகிறது.. ஓட்டுனர் என்னிடம் சொன்ன அந்த வார்த்தைகள்.

"தம்பி, அந்த ஆள் எனக்குத் தெரிஞ்சவர். கொஞ்ச நாளாகவே வீடு தேடி அலைஞ்சு கொண்டிருக்கிறார். ஆருமே இவையளுக்கு இடம் குடுக்க விரும்பலை. ஏனென்றால இவையளால அவை எதிர்பார்க்கிற வாடகை குடுக்க முடியாதென்று தெரியும்..

சொந்த இடத்தை விட்டு வந்து, அகதியாய் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவை, ஆயிரக் கணக்கிலை வீட்டு வாடகை குடுக்க எங்கே போவினம்?... ரெண்டு நாளைக்கு முந்தி அந்த மனிசன் இதையெல்லாம் என்னட்ட சொல்லி அழுதிட்டுது. ..தம்பி !! உதவி செய்யுற நிலையில் நானில்லை எண்டு கவலையாய் இருக்கு."

'சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவை ஆயிரக்கணக்கிவை வாடகை குடுக்க எங்கே போவினம்?'

மனசுக்குள் தெளிவான முடிவொன்று பிறக்கிறது. எங்களால முடிஞ்ச ஏதாவதொண்டைச் செய்ய வேணும்!

எனது முடிவை அப்பாவுக்கு சொல்ல நினைக்க, அவர் போன் எடுக்கிறார்.

"என்னடா? உன்ரை போன் வரும் வருமென்று பாத்துக் கொண்டேயிருந்தேன்.. இப்ப உங்கை பத்து மணியும் ஆகப் போகுது

என்ன நடந்தது? லோயரிட்டை போனியா?.. இவ்வளவு நேரமும் ஏன் அதைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் இருக்கிறாய்...?"

"நான் லோயரிட்டை போகேல்ல அப்பா"

"ஏன் போகேல்லை?. ஏதும் பிரச்சனையே?.."

"ஒரு பிரச்சனையும் இல்லை.. வீட்டை விற்க வேண்டாமென்று பாக்கிறேன் "

"ஏன் தம்பி....? ஓ...! விக்காம இருந்தா ஒரு காலத்திலை நீ போய் இருக்கலாம்னு மனம் மாறிட்டுதோ? அப்படியென்டா, அதை விட எங்களுக்கு வேறை என்ன சந்தோசம்....?"

அப்பாவின் குரலில் புதிய உற்சாகம்.

"இல்லையப்பா.. சொல்லுறன்.."

போரில் பாதிக்கப்பட்டவர்களை வெவ்வேறு இடங்களில் போய் பார்த்ததையும், ஓட்டுனர் மூலமாக அறிந்த அந்தக் குடும்பம் பற்றியும் சொன்னேன்.

"சொந்த வீடுகளைப் பறி குடுத்திட்டு, வாழ வழி தெரியாம எவ்வளவு சனம் இங்கை கஷ்டப்படுகினமென்று இங்கை வந்து பாத்தபிறகுதானப்பா தெரிஞ்சுது.. எல்லோருக்கும் உதவி செய்ய முடியாட்டியும் ஒரு குடும்பத்துக்கு எண்டாலும், எங்களாலை முடிஞ்சதை செய்ய வேண்டுமென்று மனம் சொல்லுதப்பா"

நானே தொடர்ந்தேன்....

"இன்னும் சில மாதங்களிலை குழந்தை கிடைக்கப்போற ஒரு பொம்பிளை. ரெண்டு பிள்ளையள்.., தகப்பன். குழந்தை பிறக்கிறதுக்கு முதல் வீட்டை விட்டிட வேணும் எண்டு வீட்டுக்காரர் கண்டிப்பா சொல்லீட்டினமாம்! உடனடியா வீட்டை விட்டுப் போறதெண்டா எப்பிடியப்பா?.. கஷ்டம் தானே? ஓடித்திரிஞ்சு ஒரு இடமும் கிடைக்கேல்லையெண்டு அந்த மனுசன் எங்கடை ட்ரைவரிட்டை சொல்லி அழுதாராம். யோசித்துப் பார்த்தன்... அந்த குடும்பத்தை எங்கடை வீட்டில இருக்க விட்டா இந்த நேரம் இது அவைக்கு ஒரு பெரிய உதவியாக இருக்குமென்று மனம் சொல்லுது... அந்தப் பையனும், படிப்பு குழம்பாமை ஏதோ படிச்சு வந்துடுவான்.. எங்கடை பின் வளவுக்கை கூட ஏதும் பயிர் வைக்கலாம்."

"..................................."

"என்னப்பா ஒண்டுமே சொல்லாமல் இருக்கிறியள்...?"

"என்ன தம்பி சொல்ல? உன்ரை நினைப்பு நல்லதுதான்....ஆனா, அதிலை சில சிக்கல்கள் இருக்கு"

"என்ன சிக்கல்..?"

"தொடர்ந்து இருக்க விட்டா அவை பிறகு எழும்ப மாட்டினம்.."

"எழும்பாட்டி என்னப்பா?. நீங்களும்,அம்மாவும் வந்து அந்த வீட்டிலை இருக்கப் போறியளா? அல்லது நான் வந்து இருக்கப் போறனா?"

"அதுக்கில்லையடா."

"கனக்க யோசிக்காதேங்கோ. அவைக்கு சொந்த வீடும் நிலமும் இருக்கு.. ஒரு நேரம் நாட்டு நிலமை சரி வந்தா அவை அங்க போயிடுவினம். அதுக்குப் பிறகும் இது போலை ஆருக்காவது எங்கடை வீடு பயன்படுமென்றா அது நல்லது தானே அப்பா?"

"ம் நீ சொல்லுறதும் சரிதான்.."

"பின்னை என்னப்பா? அவனவன் நாட்டுக்காக உயிருகளைக் குடுத்துப் போய்ச் சேர்ந்திட்டாங்கள்.. நாங்கள் என்ன செய்தம்.?. at least, ஒருவீடு. நினைச்சுப் பார்த்தா இந்த வீடு ஒரு தூசிக்குச் சமம். அல்லது ஒண்டும் இல்ல என்று கூடச் சொல்லலாம். இதையாவது செய்யாட்டி நாங்கள் மனுசரே இல்லையப்பா.. என்ன ஓகே தானே..?"

" ம். சரி அப்பு. உன்ர விருப்பப்படியே செய் ராசா...!!"

"Good..!! thanks அப்பா!! , அம்மாட்டையும் இதை சொல்லி விடுங்கோ. நாளைக்கு ட்ரைவ ரோடை போய் அந்த குடும்பத்தை நேர்ல சந்திச்சு, அவை கவலைப்படாமை எங்கட வீட்டிலை வந்து இருக்கலாமென்று . சொல்லப் போறன்.."

" வீட்டைத் திருத்த டிரைவர் மூலமாக ஆட்களை ஒழுங்கு செய்திட்டா சரி.."

"எப்படியும் ஒரு கிழமைக்குள்ளை அங்கை வந்து விடுவனப்பா. take care!"

"சரி தம்பி!. நீயும் கவனமய்யா!!"

# அக்கறை உறவுகள்

அண்ணனின் ‘அகவைநாள் வாழ்த்துகள்’ மிகவும் அருமை. ஊர் ஞாபகங்கங்களை கொண்டு வந்து நெஞ்சை நெகிழ வைக்கிறது.

–செல்வபாக்கியம்
சிட்னி

சமகால அரசியலைச் சொல்லும் பாரியின் கட்டுரை மிகவும் அருமை. ஆசிரியர் பத்தியும் மிக எளிய நடையில் வார்த்தை ஜாலங்கள் இல்லாமல் இருப்பது சிறப்பு. அடுத்த பத்திரிகைக்கான ஆவலைத் தூண்டுகின்றன. வாழ்த்துகள்.

–ரோகிணி
கலிபோர்னியா

பிரிகேடியர் தீபனுடைய அனுபவத்தில் தேசியத் தலைவரின் ஆளுமை வடிவம் அருமையாக விரிகிறது. மிகவும் ரசித்தேன். வரலாற்றில் ஒரு நாள். வழமைபோல சிறப்பு.

–அத்தி
பிரித்தானியா.

‘எங்களின் குரல் கேட்கிறதா?’ மாவீரர் பற்றிய கவிதையும் அதைத் தொடர்ந்த மாவீரர்களின் நினைவுக் குறிப்புகளும் மனதை நெகிழச் செய்தன.

–தெய்வமணி
மொன்றியல்




பத்திரிகையை எவருக்கும் தெரியாமல் வாசிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம். பத்திரிகையை தவறாது வெளியிடுங்கள். எதிர்பார்த்திருப்போம்.

–வாசகர்
தாயகம்.

சிறுகதைக்காகவே பத்திரிகையை வாசிக்கிறேன். கண்களில் நீரை வரவழைக்கும் எழுத்து நடை. கட்டுரை வாசிப்பதில் ஈடுபாடில்லாத என் போன்றவர்களுக்காகவே தேடித்தேடி தகவல்களைக் கொடுப்பது போலுள்ளது. வழமை போல மிகவும் அருமை. அஜந்திக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

–மகேஸ்
பாரிஸ்


பத்திரிகை முழுவதும் அழகான எழுத்து நடையில் உள்ளது. ‘Layout’ மிகவும் சிறப்பு. பத்திரிகை நன்றாக இருக்கிறது. ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து விட்டால் இளையோருக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.


–செல்வகுமார்
பேர்ளின்

அக்கறை உறவுகளின் செய்திகள் எமக்கு உற்சாகத்தை ஊட்டுகிறது. தொடர்ந்தும் உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். நன்றி.


எழுநிலம்
மாத இதழ்
மலர்- 1
மே 2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
உலக உழைப்போர் நாள்
முள்ளிவாய்க்கால் கஞ்சி


எழுநிலம்
மாத இதழ்
மலர்- 2
மே 2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
முள்ளிவாய்க்கால் வலி சுமந்த சிறப்பிதழ்


எழுநிலம்
மாத இதழ்
மலர்- 3
ஜூன் 2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
சீனப் பொறிக்குள் சிறீலங்கா
சிவகுமாரனும் தமிழ் மாணவர் பேரவையும்


எழுநிலம்
மாத இதழ்
மலர்- 4
ஜூலை 2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
கறுப்பு ஜூலை 1983 நினைவுகள்
இவர் நாமம் ஒரு காலம் தமிழரும் பேசும்!


எழுநிலம்
மாத இதழ்
மலர்- 5
ஆகஸ்ட் 2021
திருவள்ளுவர் ஆண்டு 2052


எழுநிலம்
மாத இதழ்
மலர்- 6
செப்டெம்பர் 2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பசியுடன் இருக்கிறான் பார்த்திபன்


தமிழீழ மகளிர் தின விசேட இதழ்
எழுநிலம்
மாத இதழ்
மலர்- 7
அக்டோபர் 2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
போர் வீரர்கள் வீரச்சாவடையும் இடத்தில் நடுகல் வைப்பதும் அதைப் போற்றிப் பாதுகாப்பதும் தமிழர் பாரம்பரியம்..


தமிழீழ மாவீரர் நாள் விசேட இதழ்
எழுநிலம்
மாத இதழ்
மலர்- 8
நவம்பர் 2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
"இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை விடுதலைப்புலிகள் வீழ்வதுமில்லை"
நவம்பர் 27


எழுநிலம்
மாத இதழ்
மலர்- 9
டிசம்பர் 2021
திருவள்ளுவர் ஆண்டு 2052

